Registered as a news paper. | பக்கங்கள்: பத்து | விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 24 (25.06.2003) புதன்கிழமை இதழ்: 265

யாழ்.மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505

(சீ-1096)

# 'பொங்கு தமிழ்' நாளைமறுநாள் குடாநாடெங்கும் விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்)

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்விற்கு குடாநாடு தழுவிய நிலையில், இறுதிக்கட்ட ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

நாளைமறுதினம் மாலை 3.30 மணியளவில், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் - 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற தொனிப்பொருளில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்விற்கான ஏற்பாடுகள் யாவும் பூரணமாகி வருகின்றன.

யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளிலும், சந்திகளிலும் 'பொங்கு தமிழ்' எழுச்சிநிகழ்வு தொடர்பான அலங்கார வளைவுகள், பதாகைகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.நகரவீதிகள் மற்றும் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் (10 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் குருகுலம், காந்தி இல்லம் சிறார்களுக்கென அமைக்கப்பட்ட பூங்காவில் விளையாடி மகிழும் இளந்தளிர்கள் இவர்கள்.

# புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம்; வரைபை சமர்ப்பிக்க ரணில் இணக்கம்!

## சொல்ஹெய்முடன் லண்டனில் சந்திப்பு

(லண்டன்)

**விடுதலைப் புலிகள் கோரியிருக்கும் இடைக்கால நிர்வாக அமைப்புக்கான வரைபை, அவர்களுக்கு அனுப்பிவைக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் - இதற்காக வரைபொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் - நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.**

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றிரவு - லண்டனில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

நேற்றுமுன்தினம் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன், தான் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை எரிக் சொல்ஹெய்ம் - பிரதமருக்கு எடுத்து விளக்கினார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான, விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்புகள் குறித்தும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் திகதி; ஆராய வன்னிக்கு நோர்வேகுழு வரும்!

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான வரைபை அரசாங்கம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் -

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை - மீண்டும் எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து ஆராய்வதற்கு, நோர்வேயின் விசேட தூதுக்குழு ஒன்று மிகவிரைவில் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளது.

மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கும் சமாதானப் பேச்சுக்களுக்கான கால அட்டவணையைத் தயாரித்தல் மற்றும் ஏனைய ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே, மேற்படி தூதுக்குழு கொழும்பிறகு விஜயம் செய்யவிருக்கிறது. அக்குழு பின்னர் அங்கிருந்து வன்னிக்கும் செல்லவுள்ளது.

அதேவேளை - ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியும் மிக விரைவில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரியவருகிறது.

**புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம்**

## கண்காணிப்புக்குழுவின் அறிக்கை இன்று அல்லது நாளை வெளியாகும்

(கொழும்பு)

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை இன்று அல்லது நாளை அரசுக்கும், புலிகளுக்கும் கையளிக்கப்படும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹோக்லண்ட் தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு அலுவலகங்கள் - இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, தனித்தனியாக அறிக்கைகளைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

**பொங்கு தமிழுக்கு நாளையும், நாளைமறுதினமும்**

## கடைகள், அலுவலகங்களை மூடி ஒத்துழைப்புத் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வினையொட்டி, நாளையும் நாளை மறுதினமும் - அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றை மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற தொனிப்பொருளில், யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வினை - அர்த்தமுள்ளதாகவும், சிறந்த முறையிலும் நடத்துவதற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள் குறித்து தென்னாபிரிக்க முக்கியஸ்தருக்கு விளக்கம்!

**யாழ்.மனிதநேய அமைப்புக்கள் சந்திப்பு**



ஜோடி கோலப்பன்

யாழ்.குடாநாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படுதல் தொடர்பாகவும், மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் குறித்தும் அறிந்து கொள்வதில், யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருக்கும் தென்னாபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் நாகேந்திரம் ஜோடி கோலப்பன் அதிக ஆர்வம் கொண்டுள்ளார்.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் - யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களுக்கும், தென்னாபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவருக்குமிடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இச்சந்திப்பிலேயே, யாழ்.நிலவரம் குறித்து, தான் மிக்க ஆர்வம் கொண்டிருப்பதாக, தென்னாபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

இச்சந்திப்பின்போது- படையினரால் கைதாகிக் காணாமற்போனோர் விடயம் தொடர்பாகவும், இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினால் - யாழ். குடாநாட்டில் மக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவு உற்சவத்துக்கு பாஸ் நடைமுறை இல்லை!

**இன்றிலிருந்து படகுச்சேவையும் ஆரம்பம்**

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது, "பாஸ்" நடைமுறை அமுல்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த உற்சவத்தை நடத்துவது தொடர்பான இறுதிக்கூட்டம், வேலணை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் - ஆலய (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ

இலங்கையில் முன்னணி வகிக்கும்
உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 2223891 071 349999 071 348888
074 - 512666 - 01 - 360290

(சீ-975)

# ஈழத் தமிழர்களைக் கொச்சைப்படுத்தும் கமலஹாசனின் 'நள தமயந்தி' திரைப்படம்



ஈழமக்கள், மீண்டும் ஒரு தமிழ்த் திரைப்படத்தால் கொச்சைப்படுத்தப் பட்டுள்ளனர். அந்தத் தமிழ்த் திரைப் படம் 'நள தமயந்தி.'

கனடா, ஐரோப்பிய நாடுகளில் வாழும் 5 லட்சத்துக்கும் அதிக ஈழத் தமிழர்களைச் சந்தையாக வைத்து, தமிழ்த் திரைப்படங்கள் ஈழத்தமிழர் களை விவகாரமாக்கத் தொடங்கின. ஈழத்தமிழரின் சந்தையில், தமிழ்த் திரைப்படங்கள் - ஈழத்தமிழர்களைக் கொச்சைப்படுத்தியே வருகின்றன. இந்தக் கொச்சைப்படுத்தலை விளங் கிக்கொள்ளாது, தமிழ் திரையுலகில்- ஈழத்தமிழர் விவகாரம் கையாளப் படுதலைப் பெருமையாகக்கருதி, ஈழத்தமிழர்கள் தம் குருதி சிந்திய உழைப்பினை அள்ளி இறைப்பது பரிதாபம்.

1980 களின் ஆரம்பத்தில் பைலட் பிரேம்நாத் படம் இலங்கை - இந்தியக் கூட்டுத் தயாரிப்பாக உருவாகியது. இதில் - யாழ்ப்பாணத் தமிழ் பாத்திரம், ஈழத்தவர் பங்களிப்பாக நகைச்சுவைக்குப் பயன்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தவராக நடித்தவர் தமிழகத்தின் மனோரமா.

ஈழப்போராட்டம் முனைப்படைந்த தன் பின், ஈழப்போராளிகளைக் கொச்சைப்படுத்திய முதல் படமாக, கே.பாலச்சந்திரன் தயாரிப்பில் 'புன்னகை மன்னன்' வந்தது.

இதன்பிறகு, 'காற்றுக்கென்ன வேலி', 'கன்னத்தில் முத்தமிட்டால்', 'நந்தா', 'கும்மாளம்', 'தெனாலி' உள ளிட்ட படங்கள் ஈழத் தமிழர்களைப் பயன்படுத்தின.

இவற்றில், 'காற்றுக்கென்ன வேலி', 'நந்தா' தவிர்ந்த ஏனைய படங்கள் - ஈழத்தமிழர்களையும், அவர்களின் விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தியவை. ஈழத தமிழர்களைக் கறுப்பானவர்களாக, காட்டுமிராண்டித்தனம் கொண்டவர்களாக, இவை காட்டியிருக்கின்றன. ஈழத்தமிழரின் யதார்த்தத்திற்கு முரணான விடயங்களையே இவை காட்டின (இடம், பொருள், காலம், பேச்சு வழக்கு யாவற்றிலும்).

இதைவிட, அவர்களின் யாழ்ப்பாணக் கதாபாத்திரங்கள், பேசிய யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு - யாழ்ப்பாணத்தவர்களுக்கே விளங்காதது.

'நந்தா' படம், தமிழகத்தில் ஈழத் தமிழர் பிரச்சினையை ஒரளவுக்குப் பேசியது. இந்தப் படங்கள் யாவும், தமிழகம் வந்த ஈழத்தமிழ் அகதிகள் விவகாரத்தை மையமாகக் கொண்டவையே ஆயினும், அனைத்துப் படங்களிலும் பிரச்சினைக்குரிய ஈழத்தமிழர்கள் கதாநாயகிகளாகவே உள்ளனர். கதாநாயகர்கள் தமிழகத்தவர்கள் ஆவார். ஈழத்தமிழ் கதாநாயகிகள் (அவர்கள் தமிழ் தெரியாத வட இந்திய நடிகைகளே), தமிழகத் தமிழ்க் கதாநாயகர்களின் பின்னால் சுற்றி அலைபவர்களாகவோ, தமிழகத்தின் கதாநாயகர்களிடம் சரண் புகுந்தவர்களாகவோ சித்திரிக்கப்பட்டனர்.

இதில், 'தெனாலி'யில் மட்டும், ஈழததமிழர் கதாநாயகனாக இருக்கிறார் (கமலஹாசன்). அவரின் யாழ்ப்பாணத் தமிழ், அவருக்கு மட்டுமே விளங்குவது. அவர் ஒரு பைத்தியம் வேறு.

இந்தவகையில், இந்த ஒவ்வொரு திரைப்படங்களும், ஈழத்தமிழர்களைக் கொச்சைப்படுத்தியவையே. அவற்றைத் தனித்தனியாக ஆராய்ந்தால், இந்தப் பந்தி நீண்டதாகிவிடும். இப்போதைக்கு 'நள தமயந்தி'யை மட்டும் எடுக்கலாம்.

'தெனாலி'யில், ஈழத்தமிழரை தான் ஈழத்தமிழனாக 'நடித்துக் கொச்சைப்படுத்திய உலகநாயகன் கமலஹாசன், இப்பொழுது அடுத்ததாக, தான் நடிக்காது களம் இறக்கியிருப்பது 'நள தமயந்தி'யை.

இதில், அவுஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் பலியிடப்பட்டுள்ளனர். தமிழக பாலக்காடு பிராமண சமையற்காரரான மாதவன், அவுஸ்திரேலிய செட்டியார் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு செல்கிறார். அவர் அங்கு செல்கையில் செட்டியார் இறந்துவிடுகிறார். இதன்பின், அநாதரவாகி, கடவுச்சீட்டு ஆவணங்களையும் தொலைத்துவிட்ட மாதவன, ஒரு இந்தியத் தம்பதியினரால் காப்பாற்றப்படுகிறார். மாதவன் விவகாரத்தைக் கையாள, ஈழத்தமிழ் வழக்கறிஞர் (கறுத்த முரட்டுமுக வாலிபன்) ஒருவரிடம் தமிழகத் தமிழர் உதவி கேட்கிறார். அந்தக் காட்சியில்தான் அந்த ஈழத்தமிழர் அறிமுகமாகிறார். அவரின் முதல் வசனமே 'போலிக் கடவுச்சீட்டை எடுப்பது' என்பதாகும். மோசடிவேலையை அறிந்த அவுஸ்திரேலிய பொலிஸ், மாதவனைப் பிடிக்க முனைகிறது.

ஈழத்தமிழ் வழக்கறிஞர் - பெயருக்கு ஒரு அவுஸ்திரேலியப் பிரஜையான பெண்ணைத் திருமணம் முடிதது, குடியுரிமைபெற மாதவனுக்கு ஆலோசனை கூறுகிறார். இதன்படி திருமணத்திற்கு அறிமுகம் செய்யப்பட்ட பெண் ஈழத்தமிழிச்சி. திருமணம் தேவாலயத்தில் முடிந்ததும், குளறுபடிகள் தொடர்கின்றன. மாதவனுக்குத் திருமணம் முடித்த பெண் வழக்கறிஞரின் காதலி. வழக்கறிஞர், முதலில் ஒரு ஈழப்பெண்ணை மணமுடித்து, குழந்தையுடன் கைவிட்டவர் (ஈழத்தமிழர் மகா வில்லனாக்கப்பட்டுவிட்டார்). கதாநாயகியான ஈழத் தமிழிச்சி, திருமண விடயத்தில் ஒழுக்கச் சீர்கேடானவர். கதாநாயகி வெள்ளை நிறத்தவர். இதைவிட, விமானநிலைய அதிகாரியான ஈழத் தமிழர் உட்பட அவுத்திரேலிய உள்வரவு அதிகாரி வரையான ஈழத்தமிழர்வரை அனைவரும் கறுப்பானவர்கள்.

கதாநாயகன் மற்றும் படத்தில் வரும் தமிழகத்தவர்கள், மிக அழகான வெள்ளை நிறத்தவர்களாகவும், ஈழத்தமிழர்கள் - புலம்பெயர்ந்த இடததிலும் படுமோசமானவர்கள், வில்லத்தனமானவர்கள் என்பதை, 'நள தமயந்தி', தமிழகத் தமிழர்களுக்குக் காண்பித்துள்ளது. அதைவிட, புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடம் பணத்தையும் சம்பாதித்துள்ளது.

இதுவரை - தமிழகத்தில் அகதிகளாகவுள்ள ஈழத்தமிழர்களையும், ஈழவிடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்திய தமிழகத் திரையுலகம், இப்பொழுது புலம்பெயர்ந்த தமிழர்களையும் கொச்சைப்படுத்தத் தொடங்கிவிட்டது.

இந்த 'நள தமயந்தி' உள்ளடக்கம், புலம்பெயர் தமிழர்களை மோசடிக்காரர்களாகக் காட்டியுள்ளது. அவர்கள் உச்சரிக்கும் யாழ்ப்பாணத் தமிழ் - யாழ்ப்பாணத் தமிழரைக் கொச்சைப்படுத்தியுள்ளது.



24 மணிநேரம் கொண்ட ஒரு நாளில், 18 மணிநேரத்தைக் குருதி சுண்ட உழைத்து, தாயகத்தில் போரால் வாடும் மக்களை நிமிர்த்தவும் விடுதலைப் போராட்டத்தை நகர்த்தவும் அச்சாணியாக உள்ள புலம்பெயர் தமிழர்களை, தமிழகத் திரையுலகம் குறிவைத்துக் கேவலப்படுத்தியுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் உழைப்பினைக் கேவலப்படுத்த, கால்கோல் இடப்பட்ட முதல் திரைப் படம்தான் 'நளதமயந்தி'. இதன் வழி இனி தொடரும்.

இது தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள் அவதானமாக இருக்க வேண்டும். ஏனெனில், புலம்பெயர் ஈழத்தமிழர் தொடர்பான தவறான தோற்றத்தை உலகளவில் இது ஏற்படுத்தலாம். ☆

**தி. அறிதிரு**


## சுயதொழில் வாய்ப்புத்திட்டம் ஸ்கீரீன் பிரிண்டிங் பயிற்சி



பெரிய முதலீடு இன்றி உங்கள் வீட்டிலேயே சிறிய இடத்தில் திருமண அழைப்பிதழ், ஸ்டிக்கர், லெட்டர் பெட், விசிட்டிங் கார்ட் அத்துடன் Textile Printing எல்லாவகைத் துணிகளிலும் பிரிண்டிங் செய்யலாம். மரம், பிளாஸ்ரிக், பேனா, CD கவர், CD யில், Four Colour Print, Embossed Print, Foil print, கலண்டர் என்பன பிரிண்டிங் செய்யலாம். இவற்றினை செய்முறை பயிற்சியளிக்க 15 வருட தேர்ச்சி பெற்ற ஸ்கிரீன் பிரிண்டிங் நிபுணர் திரு. R. பரதன் D.P.Tech. அவர்கள் வருகை தருகின்றார். 30.06.2003 இற்கு முன் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

✪ வகுப்புக்கள் 04.06.2003 அன்று ஆரம்பம்.

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

**CAREER. COM INSTITUTE**

(சி-1110) இல.79, பிரதான வீதி, யாழ்ப்பாணம் 0777 706334, 0777 108423

## ஏல விற்பனை

ஒரு தொகுதி பழைய மின்விசிறிகள் 28.06.2003 அன்று காலை 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும். எடுப்பவர்கள் உடனே பணத்தைச் செலுத்தி பொருளை அப்புறப்படுத்த வேண்டும்.

எஸ்.சதுர்முகம்,
பணிப்பாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-1113)

## பாடசாலை அதிபர்களே மாணவ மணிகளே

உங்களுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் எல்லாம் 10% - 20% வரையான கழிவுடன் அள்ளி வழங்கப்படும், தரமான பாடசாலை அலுவலக உள்ளீடுகள், எல்லாவகையான பாடசாலை நூல்களும் சரித்திரம், சாஸ்திரம், பிரபல எழுத்தாளர்களின் படைப்புக்கள், அறிவு வளர்க்கும் நூல்கள், சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், அறிவு வளர்க்கும் விளையாட்டு உபகரணங்கள், (கணிதம் கற்க), டீன் உபகரணம் (ஆங்கில உச்சரிப்பு), ஸ்கிறபல்ஸ், மொனோபொலி, அத்துடன் மக்கினற, பெனல், பச்சைபோட் வகைகள், எல்லா அளவுகளிலும் பைல் (File) அலுமாரி (கபினற்) இரும்பு அலுமாரி, பாடசாலை நூல் அலுமாரி, தொழிசார் உபகரணங்கள், விவசாய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள். எங்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக வன்னிவரை பட்டுவாடா செய்யப்படும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2225542

(சி-1028)

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில், 202 - 0801 ஆட்டோவும், CD 125 - GJ 0803 இலக்கமுள்ள மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு -

கிருஷ்ணமூர்த்தி, 114/19, நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை), யாழ்ப்பாணம். T.P.2789 (392)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார் (இரு வேடம்), தேவயானி நடிப்பில்

**சூரிய வம்சம்**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

RED DRAGON

(சி-974)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

**பாறை**



10.30, 2.30, 6.30, 9.30

(சி-973)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

# அறிவித்தல்

## நவீன சந்தை கடை இல.26 மேல்மாடி குத்தகையை இரத்துச் செய்தல்

நவீன சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள இல.26 கடையின் வாடகை உரிமையாளர் தொடர்ச்சியாக வாடகைக் கட்டணத்தை செலுத்தாமையால், அக்கடைக்கான குத்தகையை இரத்துச்செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் குத்தகையாளரோ அல்லது அவரது வாரிசோ, தனது ஆடசேபனையை 10.07.2003 இற்கு முன் ஆணையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்,
2003.06.23

(சி-1112)


யாழ்ப்பாணம் Scriptnet உம், Digitel Media Network உம் இணைந்து நடாத்தும்

## திரை விருந்தினர் சந்திப்பு

காலம்:- இன்று புதன்கிழமை
நேரம்:- காலை 11 மணிமுதல் மதியம் 1 மணிவரை
இடம்:- யாழ்.பல்கலைக்கழக சிற்றி மண்டபம் (ஜும்மா பள்ளிவாசல் அருகில்)
விருந்தினர்:- 1. சர்வதேச திரைப்படக் கல்லூரியின் இலத்தீன் அமெரிக்காவுக்கான விரிவுரையாளரும், சுவிஸ் தேசிய தொலைக்காட்சி நிலைய விபரணப்பட இயக்குநருமான மறியான் பிளசர்.
2. சுவிஸ் தேசிய தொலைக்காட்சி நிலைய படப்பிடிப்பாளரான வேணர் செயிடர்.
விடயம்:- விபரணப்படம் தயாரித்தல் பற்றிய செய்முறை விளக்கம்

குறிப்பு:- ஸ்கிறிப்நெற் திரைக்கதை உருவாக்கல் பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்கள், விண்ணப்பித்தவர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது இதிற் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊடக அனுசரணை: நமது ஈழநாடு

# பாலாவுடனான பேச்சு விபரங்களை நோர்வே குழு ரணிலுக்கு விளக்கும்!




விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பால சிங்கத்துடன் கலந்துரையாடிய விட யங்கள் குறித்து, லண்டனில் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவிடம், நோர்வேத் தூதுக்குழுவினர் எடுத்து விளக்கவுள்ளனர்.

லண்டனில் நேற்று முன்தினம் காலை புலிகளின் அரசியல் ஆலோ சகர் கலாநிதி அன்ரன் பாலசிங் கத்தை, எரிக் சொல்ஹெய்ம் மற் றும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிறைவேற்றுத்தர அதி காரி லிசா கோல்டன் ஆகியோர் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து- புலி களின் அரசியல் ஆலோசகர் கலா நிதி அன்ரன் பாலசிங்கம் தகவல் வெளியிட்டபோது -

அரசாங்கத்துடனான பேச்சுக் களை விடுதலைப் புலிகள் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளனர். நோர்வேத் தூதுக் குழுவினருடனான பேச்சுக்கள் நம்பிக் கையளிக்கக் கூடியவகையில் ஆக்க பூர்வமானதாக அமைந்திருக்கிறது.

அரசாங்கம் பிரேரிக்கவுள்ள இடைக்கால நிர்வாகப் பிரேர ணையைப் புலிகள் எதிர்பார்த்திருப்ப தாகவும் நோர்வே தூதுக்குழுவினரி டம் தெரிவித்தோம்.

இது தொடர்பான உறுதியான பிரேரணையைச் சமர்ப்பித்தால், புலி கள் ஆராய்ந்து முன்னேற்றங்கள் குறித்து அறிவிப்பார்கள் என்றும்,

இருதரப்புக்களும் இணைந்து, பேச்சுக்கள் மூலம் இறுதியான வடி வத்தினை உருவாக்கமுடியும் என் றும் நோர்வே தூதுக் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன், இந்தச் சந்திப்பில் - சமாதானப் பேச்சுக்கள் புதிய நிகழ்ச்




சித்திட்டத்தின்படியே ஆரம்பிக்க வேண்டும்' என்று, நோர்வே தூதுக் குழுவினரிடம் வலியுறுத்தித் தெரி வித்திருப்பதாகவும் கலாநிதி அன் ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும், பேசிக்கொண்டிருப்பதை விட, மக்களின் முக்கிய பிரச்சினை களைத் தொட்டுநிற்கும் கள யதார்த்த நிலைபற்றி, பேச்சின்போது ஆராய வேண்டும் என வலியுறுத்தியதாக வும் அவர் குறிப்பிட்டார்.

## களனிப் பல்கலைக்கழகத்தில் மோதல்

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவக் குழுக் களுக்கிடையே - நேற்றுமுன்தினம் காலையில் ஏற்பட்ட மோதல் காரண மாக, பல்கலைக்கழகத்தில் பதற்றம் நிலவியது.

களனிப் பல்கலைக்கழத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மோதல் இடம்பெற்றுவருவதால், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## இந்து மாநாட்டு பரிசளிப்பு விழா

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, யாழ். பிராந் தியக் குழுவினால் - மாணவர்களுக் கிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, கட்டு ரைப் போட்டி ஆகியவற்றுக்கான பரிசுகள் வழங்கும் வைபவம், எதிர் வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வில், அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினரா கக் கலந்துகொள்ளவுள்ளார்.

# நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏதுமில்லை!

### ஒஸ்ரின் பெர்னாண்டோ கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப் புக்கு - எவ்வித அச்சுறுத்தலும் ஏற் படவில்லையென்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முப்படைகள் வசமுள்ள ஆயுதங் கள் மற்றும் அவற்றின் வலிமைகள் குறித்து வெளியிடப்படும் கருத்துக் கள் தொடர்பாக - எந்தவித விளக் கத்தையும் அளிக்கமுடியாது என் றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஊடகங்கள் வழியாக முப்படை களின் விபரங்களை வெளியிடுவது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்த லாக அமையுமென்றும் அவர் சுட்டிக காட்டினார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளதென்று எதிர்க்கட்சி யினர் தெரிவித்த கருத்துக்குப் பதி லளிக்கும் வகையிலேயே, பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ் ரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



மனிதநேய கண்ணிவெடி அகற்றும் குழுவின் மகளிர் பிரிவுக்கான பயிற்சிகள் இடம்பெற்றுவருவதைப் படங்களில் காணலாம். படங்கள்:-ஜெகதீபன்

### மேல் கொத்மலை திட்டத்துக்கு எதிராக

# போராட்டம் நடத்தியோர் மீது தாக்குதல்; தொண்டமானின் உடையும் கிழிக்கப்பட்டது!

### நவீன் திஸநாயக்க குழுவினர் கைவரிசை

(நுவரெலியா)

மேல் கொத்மலை நீர்மின் திட் டத்தைச் செயற்படுத்துவதற்கு எதிர்ப புத் தெரிவித்து - நுவரெலியா மாவட் டத்தில் முப்பதியிரண்டு இடங்களில் நேற்றுமுன்தினம் மறியற்போராட்டங் கள் நடத்தப்பட்டன.

இலங்கைத் தொழிலாளர் காங்கி ரஸின் ஏற்பாட்டில் இந்த மறியற் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

பெருமளவிலான மக்கள் கலந்து கொண்ட, இந்தப் போராட்டத்தைக் குழப்புவதில் பிரதி அமைச்சரும், காமினி திஸநாயக்காவின் மகனு மான நவீன் திஸநாயக்க தலைமை யிலான குழுவினர் ஈடுபட்டிருந்ததா கவும் தெரியவருகின்றது.

மறியற்போராட்டத்தில் ஈடுபட்டி ருந்த மக்கள் மீது, ஹாலி - எல வில நவீன் திஸநாயக்க தலைமை யில் சென்ற ஒரு குழுவினர் தாக்கு தல் நடத்தினர். இங்கு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட் டதில் - போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் ஆறுமு கன் தொண்டமான், குழப்பத்தை ஏற் படுத்தியவர்களுடன் வாய்த்தர்க் கத்தில் ஈடுபட்டபோது - அவர் அணிந்திருந்த உடையும் கிழிக்கப் பட்டது.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது, இன் னொரு இடத்தில் கலகக்காரர்கள் லொறி ஒன்றினை ஏற்றியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பிரதி அமைச்சர் நவீன் திஸநா யக்க தலைமையிலான குழுவினரே, தமது போராட்டத்தைக் குழப்புவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாக - இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் குற் றஞ்சாட்டியுள்ளது.

மேல்கொத்மலை நீர்மின் திட் டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், பெருமளவு மக்கள் தமது வீடுகளை இழக்கநேரிடும் என்று - இத்திட் டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டு உத்தியோ கத்தர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் அனைவருக்குமான மிகவும் முக்கியமான கலந்துரையா டல், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடை பெறவுள்ளது. இக்கலந்துரையாட லில் தமிழீழ விளையாட்டுத்துறை முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள் ளவுள்ளதால், தவறாது சமுகம் தரு மாறு தமிழீழ விளையாட்டுத் துறை யினர் கேட்டுள்ளனர்.

### மாத்தளை பாடசாலையில்

# பதினான்கு மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்!

(கொழும்பு)

மாத்தளையிலுள்ள பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றின் கூடைப்பந் தாட்ட அணியில் இடம்பெற்றுள்ள பதினான்கு மாணவிகளை, இந்த அணி யின் பயிற்றுநர் - பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாகத் தெரியவந் துள்ளது.

இவர் - மாணவிகளைப் பயிற்சிக்காக அழைத்துச் செல்வதாகக்கூறி, அடிக்கடி வெளியில் கூட்டிச்சென்று, பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடு படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவிகள் ஐந்துபேர், மாத்தளை வைத்தியசாலை யில் மருத்துவப் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

# சுதந்திரக் கட்சி அமைப்பாளராக அனுருத்த மீண்டும் தெரிவு!

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராக மீண்டும் நிய மிக்கப்பட்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பதின்னான்காவது தேசிய சம்மேளனக் கூட்டம், கடந்த ஞாயிற்றுக்கிழமை நிட்டம்புவ சங்கபோதி மகா வித்தியா லயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் - ஜெனரல் அனுருத்த ரத்வத்த, மீண்டும் கட்சியின் தேசிய அமைப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர், கண்டி உடதல வின்னவில் 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் தினத்தன்று பத்து முஸ் லிம் இளைஞர்களைப் படுகொலை செய்தது தொடர்பான வழக்கில், முதலாவது எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சி மாநாட்டில் கலந்துகொள்ள, அவருக்கு நீதிமன்றம் அனுமதியை வழங்கியிருந்தது. சிறைக்காவலரின் பாதுகாப்புடன் இவர் மாநாட்டுக்கு வந்திருந்தார்.

# கடற்படையினர் நினைத்திருந்தால் முதலே தகவல் தந்திருக்கலாம்!

### கப்பல் தகர்ப்புப் பற்றி மாரப்பன அங்கலாய்ப்பு



புலிகளின் கப்பல் - கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சம்ப வம் காலை 5 மணிக்கு இடம்பெற்ற போதும், தனக்குக் காலை 7 மணிக்கே தெரியும் என்று, பாது காப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

கடற்படை நினைத்திருந்தால் - அதிகாலை 3.15 மணிக்குப் புலிக ளின் கப்பலை அவதானித்தபோதே, எனக்குத் தெரிவித்திருக்கமுடியும்.

புலிகளும், கடற்படையினரும் கூறுகின்ற தகவல்களில் முரண்பா டுகள் காணப்படுகின்றன. இதனால், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினர் இந்தவிடயம் குறித்துத் தீவிர மாக விசாரித்து வருகின்றனர்.

திருகோணமலையில் - கண்கா ணிப்புக் குழுவினர், தாக்குதலில் ஈடுபட்ட கடற்படை அதிகாரிகளை யும், சிப்பாய்களையும் விசாரித்து வருகின்றனர். இவர்களின் அறிக்கை விரைவில் கிடைக்கும்.

எனது சார்பிலும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - கிழக்குக் கடற் பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர் பாக, போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் அறிக்கை, இந்த வாரம் வெளியிடப்படும் என்று கண் காணிப்புக் குழுவினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

# தமிழ்மக்களின் மத்தியில் ஐக்கியம் கட்டி வளர்க்கப்படுதல் வேண்டும்!

## புதிய ஜனநாயகக்கட்சி செயலாளர் செந்தில்வேல்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தின் பெயரால், ரோக்கியோ மாநாட்டில் உதவி வழங்கும் நாடுகள் - இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிய 45 ஆயிரம் கோடி ரூபா உதவித் தொகையானது, இலங்கையை மறு கொலனியாக்கம் செய்வதற்குச் செலுத்தப்பட்ட ஒரு வகை இலஞ்சமே ஆகும். இக்கையூட்டுத் தொகைக்கான வட்டியை, ஏற்கனவே செலுத்திவரும் கடன் பளுவுடன் சேர்த்து, இலங்கை மக்கள் அனைவருமே செலுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இதனால் எழும் பிரச்சினைகளை, நெருக்கடிகளை - சாதாரண உழைக்கும் மக்கள் சுமந்து கொள்ளும் நிலையே உருவாகி வருகிறது.

- புதிய ஜனநாயக்கட்சியின் 25 வருட நிறைவு விழாவை, யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு, கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில், கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அந்நிய முதலீட்டாளர்களும் பல்தேசியக் கம்பனிகளும் நமது மக்களின் உழைப்பையும், நாட்டு வளங்களையும் கொள்ளையிட்டுச் செல்லும் நிலை மேலும் அதிகரிக்கப் போகின்றது. இத்தகைய ரோக்கியோ மாநாட்டில், புலிகள் இயக்கம் பங்கு கொள்ளாமல்விட்டமை, இரண்டு விடயங்களில் சரியான நிலைப்பாடாகக் கொள்ளமுடியும்.

ஒன்று - பேரினவாத சக்திகளுக்கும் அமெரிக்காவின் மிரட்டலுக்கும் அடிபணிந்துபோகாது தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டில் உறுதியாக நின்றமை.

இரண்டாவது - இலங்கையை மறுகொலனியாக்கம் செய்யும் அமெரிக்க, மேற்குலக, ஜப்பான் நாடுகளின் உள்நோக்கங்களுக்கு உதவும் பழிச்சொல்லில் இருந்து விலகிக்கொண்டமை.

இத்தகைய நிலைப்பாடு - அமெரிக்க, மேற்குலக சக்திகளுக்கு மட்டுமன்றி - இந்தியாவிற்கும் பெரும் தலையிடியைக் கொடுத்து நிற்கின்றது. இந்நிலையில், இலங்கை - மறுகொலனியாக்கம் செய்யப்படுவதற்கு எதிராகவும், தமிழ்மக்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை நசுக்குவதற்கு எதிராகவும், தமிழ்மக்கள் - அனைத்து மக்களுடனும் இணைந்து போராட வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

முன்பு பிரித்தானியாவின் கொலனியாகவிருந்த இலங்கை, இடைக்காலத்தில் அதிலிருந்து விடுபட்டுக் கொண்டது. ஆனால், இன்று அமெரிக்க, மேற்குலக, ஜப்பான் நாடுகளினால் மறுகொலனியாக்கம் செய்யப்படுகின்றது. இதன்மூலம் நவகொலனித்துவ அமைப்புமுறை இறுக்கப்பட்டுவருகின்றது.

இதில், பிராந்திய மேலாதிக்கமான இந்தியா, தனது பங்கை நிலை நிறுத்த கடும் முயற்சி செய்து வருகின்றது. இத்தகைய சூழலில், இவர்கள் அனைவரும் இலங்கையின் பேரினவாத, பெருமுதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் இணைந்து, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் பேராட்டத்தை, சமாதானம் என்ற பெயரில் நசுக்குவதற்கும், மிரட்டி அடிபணிய வைப்பதற்கும் முயற்சிக்கின்றார்கள்.

இந்நேரத்தில் -

தமிழ்மக்கள் மத்தியில் உறுதியான ஐக்கியம் கட்டிவளர்க்கப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கரையொதுங்கிய சடலம் அடக்கம்

புங்குடுதீவின் கரையோரத்தில் ஒதுங்கிய, இனம்தெரியாத ஆணின் சடலம், பிரேத பரிசோதனையின் பின்னர் அரசசெலவில் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கண்டெடுக்கப்பட்ட இச்சடலத்திற்கு எவரும் உரிமைகோராத நிலையில், காரைநகர் பொலிஸார் முன்னிலையில் அது அடக்கம் செய்யப்பட்டது. பிரேத பரிசோதனையை, யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டார். காரைநகர் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்திவருகின்றனர்.

## காலித் துறைமுகத்துக்குள் நுழைய முற்பட்டவர் கைது

காலித் துறைமுகத்துக்குள் சட்டவிரோதமாக நுழையமுற்பட்ட நபர் ஒருவரை, துறைமுகப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

துறைமுகத்தின் அருகில் இருக்கின்ற குழி ஒன்றில் பதுங்கியிருந்த இந்த நபர், துறைமுகத்துக்குள் பிரவேசிக்க முற்பட்டமை விசாரணை மூலம் தெரியவந்திருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பொலிஸார் இதுபற்றி மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## கோஷ்டி மோதலில் ஐவர் காயம்

ஆனைக்கோட்டை முள்ளி மற்றும் மூத்தவிநாயகர் கோவிலடி ஆகிய இடங்களில், இரு கோஷ்டியினருக்கு இடையில் நடைபெற்ற மோதல் சம்பவத்தில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் நடைபெற்ற இந்த மோதலில்-வாள்வெட்டு, கல்வீச்சு மற்றும் அடிதடி சம்பவங்களால், முள்ளியைச் சேர்ந்த அருணன் இராசரத்தினம் (வயது 50), அவரது மகன் இராசரத்தினம் சதீஸ் (வயது 25), எஸ். றொக்மேந்திரன் (வயது 30) ஆகிய மூவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.. இச்சம்பவத்தில் காயமடைந்த மேலும இருவர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

## ஆசிரியர் சந்திப்பு பிற்போடப்பட்டது

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்றும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நாளையும் நடைபெறவிருந்த தென்மராட்சி ஆசிரியர்களுக்கான சந்திப்பு, மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சந்திப்புத் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று, சாவகச்சேரி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.செல்வராஜா தெரிவித்துள்ளார். (34)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 'சர்வோதய' அமைப்பு உதவி!

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், ஐந்து கிராமசேவகர் பிரிவுகளில் சர்வோதய அமைப்பு உதவிப்பணிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே இந்த அமைப்பு உதவிப் பணிகளைச் செய்யவுள்ளது.

கிணறுகள் அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், கோழி வளர்ப்புக்கான உதவிகள், மேட்டுநிலச் செய்கையாளருக்கு மரக்கறிவிதைகள் மற்றும் நெல்வயல் சொந்தக்காரருக்கு விதைநெல் ஆகியவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருவதாகவும், மிக விரைவில் இவ்உதவிகள் கிடைக்கப்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

# நான்கு மைல் தூரம் நடந்து மீன் பிடிக்கும் மீனவர்கள்!

## தென்மராட்சியில் அவலம்

கடந்தகாலங்களில் பாய்மரவள்ளங்களிலும், இயந்திரப் படகுகளிலும் சென்று மீன்பிடித்துவந்த கச்சாய், கெற்பேலி, அல்லாரைப் பகுதி மீனவர்கள், தற்போது கடலில் நான்கு மைல்களுக்கு அப்பால் நடந்துசென்று மீன்பிடிக்க வேண்டிய அவலநிலையிலுள்ளனர்.

பாதுகாப்பு வலயப் பகுதியையும், கடல்நீரேரி பூநகரியுடன் தொடர்புபட்டதையும் காரணங்காட்டி, வள்ளங்களில் சென்று மீன்பிடிப்பதைப் படையினர் தடைசெய்துள்ளனர். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், அமைச்சர்களிடமும் தெரிவித்தும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை என, மீனவ சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். (36)

# சம்பந்தன் கருத்துக்கு ஈ.பி.டி.பி. கண்டனம்!

(கொழும்பு)

ஜனநாயக அரசியல் நடைமுறைகளுக்குப் புறம்பானதும், ஜனநாயக விரோதப் போக்குடையதுமான, ஏகபிரதிநிதிகள் கோட்பாட்டை - இரா.சம்பந்தன் போன்ற மூத்த அரசியல்வாதிகள் வலியுறுத்துவது கண்டனத்திற்குரியதும், கவலை அளிப்பதுமாகும் என்று ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்- மாற்றுக் கருத்துக்களுக்கும், மதிப்பளிக்கும் ஜனநாயக அரசியல் நடைமுறையில் ஏகபிரதிநிதிகள் என்று எவரும் உரிமை பாராட்டுவது பொருத்தமற்றது. பல்லாயிரக்கணக்கான மக்களின் வாக்குகளைப் பெற்று அரசியல் ரீதியான ஆதரவை நிலைநாட்டியுள்ள சக்திகளை நோக்கி, சிறிய கட்சிகள் என்று சம்பந்தன் கிண்டல் செய்திருப்பதும் அர்த்த மற்றதாகும்.

அத்துடன், புலிகள் மேற்கொள்ளும் ஜனநாயக விரோதப் படுகொலைகளைக் கண்டிக்கும் துணிவும், உயிரிழந்தவர்களுக்காக அனுதாபம் தெரிவிக்கும் மனப்பக்குவமும் இல்லாத நிலையில்,

அவர்களை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனச் சம்பந்தன் போன்றோர் கூறுவது, புலிகளை அராஜகப் பாதையில் மேலும் முன்னேறிச் செல்ல ஊக்குவிப்பதாகவே இருக்கிறது.

எனவே -

பொறுப்புவாய்ந்த தலைவர்கள், அநாவசிய உயிரிழப்புக்களைத் தடுத்து நிறுத்தும் வகையில், ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்க வேண்டுமென்பதே பொதுவான எதிர்பார்ப்பாகும் என, ஈ.பி.டி.பி. மேலும் தெரிவித்துள்ளது.




# ஊனமுற்றோர் பாதுகாப்புக்கு குழுக்கள் அமைக்கப்பட்டன

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில், கடந்த செவ்வாய்க்கிழமை ஊனமுற்றோர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இத்தெரிவுக்கூட்டங்களில், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

போக்கறுப்பு கிராம அலுவர் பிரிவில், குழுவின் தலைவராக எஸ். பாலசுந்தரமும், செயலாளராக சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.சிறிஸ்கந்தராசாவும் - மேலும் 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. ஊனமுற்றோரைக் கவனிப்பதற்கு சமூகத் தொண்டர்களாக ச.அமுதினி, யோ.குமுதினி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (17)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



## மாணவர் மலர்

(01) இரண்டு சில்லுகள் பொருத்தப்பட்டு இழுத்துச்செல்லப்படும் வண்டியொன்றை, தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவனொருவன் ஆக்கினான்.



1. இரண்டு சில்லு வண்டி ஒன்றை ஆக்குவதற்குரிய பலகை எப்படியானதாக இருக்க வேண்டும்?
.....................................................................
2. இரண்டு சில்லுகள் பொருத்தப்பட்டு இழுத்துச் செல்லப்படும் வண்டியில் அச்சில்லுகள் பொருத்தப்படவேண்டிய மிகச் சரியான இடம் எது?
.....................................................................
3. மேலே தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டவாறு சில்லுகள் பொருத்தப்படுமிடத்து காணக்கூடிய சிறப்பான தன்மைகள் இரண்டினை எழுதுக?
(1).................................................................
(2).................................................................
4. இழுத்துச் செல்லப்படும் வண்டியில் பொருத்தப்படும் இரண்டு சில்லுகளிலும் சரி மத்தியில் துளையிட்டுப் பொருத்தாவிடின், என்ன நிலை ஏற்படும்?
.....................................................................
5. நான்கு சில்லுகள் பொருத்தப்பட்ட இழுத்துச் செல்லக்கூடிய வண்டியொன்றை ஆக்கும்போது, நான்கு சில்லுகளும் எவ்வாறு பொருத்தப்பட வேண்டும் என்பதைக் கீழே தரப்பட்டுள்ள பலகையில் சில்லுகளை வரைந்து காட்டுக.



(02) கட்டடங்களுக்குள் உள்ள சொற்களைத் தெரிவுசெய்து, கீழே தரப்பட்டுள்ள வாக்கியங் களிலுள்ள இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.

| |
|---|
| தாமரையைக், அடம்பன் கொடியைக், கொழுகொம்பை, கீழே நிலத்தில், விற்பனை, கவ்வாத்து, நுனியை, இலைகளை, கற்களைப் |

1. மிளகாய்க் கன்றுகளை நடும்போது அவற்றின் ........................ ஒடித்துவிடுவார்கள்.
2. திராட்சைக் கொடி, கொடித்தோடை ஆகிய இரு கொடி வகைகளும் ........ .................. செய்யப்படும் கொடிகளாகும்.
3. போஞ்சிக் கொடி மேல் நோக்கி வளருவதற்காக ...................... நாட்டு வார்கள்.
4. மாங்காய்களைப் பறித்து ................................ போடக்கூடாது.
5. ஒரு பகுதி நீர்மட்டத்தின் மேல் காணப்படும் தாவரத்திற்கு உதாரணமாக ................................ குறிப்பிடலாம்.

(03) கழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள தடித்த சொற்களுக்குப் பதிலாகப் பயன் படுத்தக்கூடிய ஒத்தசொற்களை அவ்வாக்கியங்களுக்கு அருகேயுள்ள கட்டங்களுக்குள் எழுதுக.

1. அந்த <u>நதியில்</u> நீர் வற்றிவிட்டது. [ ]
2. அவன் <u>ஓசை</u> எழுப்பாமல் மெல்ல மெல்ல நடந்து சென்றான். [ ]
3. கணினி பற்றிய அறிவு இருந்தால் மட்டுமே <u>இவ்வையகத்தில்</u> வாழமுடியும். [ ]
4. சுற்றுலா சென்ற மாணவர்கள் <u>ஏரியிலே</u> குளித்தார்கள். [ ]
5. நான் <u>சத்தியமாகப்</u> பொய் சொல்லவில்லை. [ ]

(04) தினசரிப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தி கீழே தரப்பட்டுள்ளது. அச்செய்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

### இரத்தினபுரியில் சூழல் மாசடையும் அபாயம்.

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் பொலித்தீன் பைகளிலும், குடிநீர் பிளாஸ்ரிக் போத்தல்களிலும் விநியோகிக்கப்படுவதால், இப்பகுதியில் சூழல்மாசடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மையிலேற்பட்ட வெள்ளப்பெருக்காலும், மண்சரிவுகளாலும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அகதிமுகாம்களில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் பொதி செய்யப்பட்ட பொலித் தீன் பைகளும், குடிநீர் பிளாஸ்ரிக் போத்தல்களும், வடிகால்களையும், கால்வாய் களையும் அடைப்பதால் மீண்டும் வெள்ளம் ஏற்படும் அபாயம் நிலவுவதாகச் சூழலிய லாளர்கள் எச்சரிக்கின்றார்கள்.

1. எப்பொருட்களால் சூழல் மாசடைகிறது?
.....................................................................
2. மேலே தரப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தி, எப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றது?
.....................................................................
3. அகதிகளான மக்கள் தற்போது எங்கே வாழ்ந்து வருகின்றார்கள்?
.....................................................................
4. மேலே தரப்பட்டுள்ள மாசடையும் பொருட்களால் ஏற்படும் தீமைகள் மூன்றினை எழுதுக?
(1).................................................................
(2).................................................................
(3).................................................................
5. மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என எச்சரிப்பவர்கள் யார்?
.....................................................................
6. மேலே தரப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தியின் தலையங்கத்தை எழுதுக?
.....................................................................
.....................................................................

(05) எண் குறிகளில் எழுதுக?

1. இருநூற்று நான்கு ..........................................
2. எண்ணாயிரத்து இருபத்தெட்டு ..........................................
3. இருபதாயிரத்து அறுநூற்று இருபத்தேழு ..........................................
4. ஐயாயிரத்து ஐம்பது ..........................................
5. ஆயிரத்து எழுநூற்று முப்பத்தாறு ..........................................

(06) எண் பெயர்களை எழுதுக?

1. 6745 ..........................................
2. 3200 ..........................................
3. 4020 ..........................................
4. 5600 ..........................................
5. 27000 ..........................................

(07) கீழே தரப்பட்டுள்ள கட்டங்களுக்குள் உள்ள எண்களை 7 ஆல் பெருக்கி அருகிலுள்ள கட்டங்களுக்குள் எழுதுக?

| | | |
|---|---|---|
| 6 | 7 | 4 |
| 8 | 2 | 3 |
| 1 | 9 | 5 |

| | | |
|---|---|---|
| 42 | | |
| | | |
| | | |

(08) "காடுகள் அழிக்கப்படும் பொழுது" ..........................என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறை யாது இருத்தல் வேண்டும்.

(1).................................................................
(2).................................................................
(3).................................................................
(4).................................................................
(5).................................................................
(6).................................................................

(தொடரும்...)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

## பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

### பொது அறிவு விடயங்கள்

அண்மையில் உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலை ஏற்படுத்திய நோய் சார்ஸ் ஆகும். இந்நோய் முதலில் சீனாவில் பரவத் தொடங்கியது. இந்நோயின் ஆங்கில விரிவாக்கம் **SARS - Severe Acute Respriatory Syndrome.**

இவ்வருடமும் உலகின் மிகப் பெரும் கோடீஸ்வராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர் 'மைக்ரோ சொவ்ற்' நிறுவனத் தலைவர் பில்கேட்ஸ் ஆவார்.

அண்மையில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸாவினால், விண்வெளிக்கு அனுப்பப்பட்டு திரும்பியபோது கொலம்பிய விண்வெளிஓடம் தவறுதலாக விபத்திற்குள்ளாகி, இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உயிரிழந்தார்.

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 1 ஆவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாய்லாந்திலும், இறுதிச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவிலும் நடைபெற்றன. இருதரப்பிற்கும் இடையில் மேற்கொள்ளப்படும் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கென அமைக்கப்பட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் ரைகேவ் ரெலவ்சன் ஆவார்.

9 ஆவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் 2001 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளிலும், 18 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியிலும், 28 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் 2004 ஆம் ஆண்டு கிரேக்கத்திலும் (எதென்ஸ்), 29 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் 2008 ஆம் ஆண்டு சீனாவிலும் நடைபெற உள்ளன.

தற்போது சிறந்த உதைபந்தாட்ட வீரராக ரொனால்டோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இறுதி உலகக்கிண்ணக் கிரிக்கெட் சம்பியனாக அவுஸ்திரேலியா விளங்குவதுடன், இதுவரை மூன்று தடவைகள் அவுஸ்திரேலியா சம்பியனானது குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டருக்கு வழங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகமாக கோபி அனான் விளங்குகிறார்.

இலங்கையில் புதிதாக அனல் மின்சார நிலையங்கள் நுரைச்சோலை, மிகுந்தலை, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

உலக சுற்றாடல் சபையே கிறீன் பீஸ் என அழைக்கப்படுகிறது. இதன் தலைமையகம் தியூனிஸியாவில் 1992 இல் திறக்கப்பட்டது.

முதன்முதலில் விண்வெளியில் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்ட அமெரிக்கர் டெனிஸ் றீட்டோ ஆவார்.

**WHO IS WHO** என்ற நூல் உலகில் உள்ள முக்கிய புள்ளிகள் (**VIP**) பற்றிய தகவல்கள் தரும் புத்தகமாகும். இதில் அதிகமாக இடம்பெற்றவர் பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் ஆவார்.

2002 - **MT** - 7 என்பது 2019 ஆம் ஆண்டில் பூமியுடன் மோதுமென எதிர்பார்க்கும் விண்பாறைக்கு நாஸாவினால் வழங்கப்பட்ட பெயராகும்.

அன்றைய நீல் ஆம் ஸ்ரோங்கின் நிலவுப் பயணம் தொடர்பாக இன்றைய பிரான்ஸிய விஞ்ஞானியும், புலனாய்வுப் பத்திரிகையாளருமான பிலிப் லியுரோ ஆதாரங்களுடன் தனது எதிர்வாதங்களை முன்வைத்து சர்ச்சையைக் கிளப்பி உள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் போது, காலநிலை மாற்றங்கள் (மழைபொழிதல்) ஏற்படுமாயின், அப்போட்டிகளின் இறுதி முடிவுகள் டக்வேர்த் லூயிஸ் முறையின் பிரகாரம் அறிவிக்கப்படும்.

உலகின் 192 ஆவது சுதந்திர நாடாகவும், இந்நூற்றாண்டின் 1 ஆவது சுதந்திர நாடாகவும் கிழக்குத் தீமோர் பிரகடனம் செய்யப்பட்டது. இதன் தற்போதைய ஜனாதிபதியாக சனானா கஸ்மாவோ விளங்குகிறார்.

உலகநாடுகளில் அதிகரித்துவரும் பொருளாதார, வர்த்தக இடை நுகர்ச்சி உலகமயமாதல் அல்லது கோளமயமாதல் எனப்படும்.

அணிசேரா நாடுகளின் மாநாடு இறுதியாக மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றன.

பூமி வெப்பமடைதலால் - மாலைதீவு, சென்னை, கல்கத்தா, பசுபிக் சமுத்திர சிறுதீவுகள், இந்தோனேஷிய சிறுதீவுகள் என்பன கடலில் மூழ்கும் அபாயங்கள் உள்ள இடங்கள் என உலக சூழல் நிறுவனம் எச்சரித்துள்ளது.

ஓசோன் படை மாசடைவதைத் தடுக்கும் முகமாக, மாநாடு கூட்டப்பட்டு தீர்மானிக்கப்பட்ட பிரகடனம், மொன்றியல் பிரகடனமாகும்.

20 ஆம் நூற்றாண்டு உலகிற்கு விட்டுச் சென்ற பிரதான பிரச்சினைகளாக - சனத்தொகைப்பெருக்கம், சூழல் மாசடைதல் என்பன காணப்படுகின்றன.

சுற்றாடல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு முதல் முதலில் 1972 இலும், இறுதியாக 2002 ஓகஸ்டில் தென்னாபிரிக்கா யொகனஸ்பேக்கிலும் நடைபெற்றன.

வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரவலயத்தில் பல ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் நில்வள கங்கைத் திட்டத்திற்குப் பிரான்ஸ் உதவியளிக்கிறது.

பல்லூடகம் (MULTI MEDIA) என்பது விடியோ, தொலைபேசி போன்றவற்றை நவீன தொழிநுட்பங்கள் மூலம் தகவல் பரிமாறிக் கொள்ளும் முறையாகும்.

மரபணு ஆய்வுமுறைமூலம் (குளோனிங்) முதன்முதலில் டொலி எனும் செம்மறி ஆடு இயன் வில்மட் என்பவரால் உருவாக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2002 டிசம்பரில் ஏவாள் எனப்படும் குளோனிங் குழந்தை உருவாக்கப்பட்டது.

தென்கொரியா, வடகொரியா ஆகிய இரு நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம்பெற பலமுறை முயன்றும், மிக அண்மையில் அங்கத்துவம்பெற்ற நாடுகளாகும்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியேற்றப்பட்ட நாடுகளாக - சேர்பியா, மொன்டனோவா, குரேஷியா என்பன விளங்குகின்றன.

கலம்பகம் என்பது பல வகையான செய்யுட்களையும், உறுப்புகளையும் சேர்த்து அகப்பொருள், புறப்பொருள் கலந்து இயற்றப்பட்ட இலக்கியமாகும்.

தியான்மென் சதுக்கம் என்பது 1989 இல் சீன அரசு மாணவர் கிளர்ச்சியை ஈவு இரக்கமின்றி நசுக்கிய இடமாகும்.

**White hall** என்பது பிரித்தானியாவின் அரச காரியாலயம் ஆகும்.

இந்தியாவில் பயங்கரவாத இயக்கங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் ஆதரவு அளிப்போரைக் கைதுசெய்வதற்கென பொடா சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் கீழ் ம.தி.மு.க. செயலாளர் வை.கோபாலசாமி (வைகோ) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் 5.75 ரூபா பெறுமதயான முத்திரையொன்று லங்கா சேக்ஸ்பியர் எனும் புகழ் பெயரால் அழைக்கப்படும் எழுத்தாளரைக் கௌரவிக்க வெளியிடப்பட்டது. அவரது முழுப்பெயர் ஜோன் த சில்வா ஆகும்.

P.உமாசங்கர்

# பதினாறு வருடங்களின் பின் இணைந்த தாயும் மகளும்!

## மனித உரிமை அலுவலகத்தில் நெஞ்சை உருக்கிய காட்சி

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, தனது குடும்பத்தைவிட்டுப் பிரிந்திருந்த இளம் பெண் ஒருவர், பதினாறு வருடங்களின் பின்னர், குடும்பத்தினருடன் மீள இணைந்து கொண்டார்.

முருங்கனைச் சேர்ந்த தனபாலசிங்கம் தவச்செல்வி (வயது 21) என்ற பெண்ணே, பதினாறு வருடங்களின் பின்னர் தனது குடும்பத்தினருடன் சேர்ந்துள்ளார்.

இவர் தனது ஐந்து வயதில், தற்காலிகமாகப் பெற்றோரை விட்டுப் பிரிந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். இதன்போது - கடந்தகாலங்களில் இடம்பெற்ற போரினாலும், இடப்பெயர்வுகளாலும் - இவர், தனது பெற்றோரைவிட்டு நிரந்தரமாகப் பிரிய வேண்டி ஏற்பட்டது.

இவரது பெற்றோரும், இவர் தங்கியிருந்த உறவினர்களும் - ஒரு தரப்பைவிட்டு, மற்றவர் பிரிந்து - இரு தரப்பினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் போய்விட்டது.

இதனால், தனது மகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தன்னிடம் ஒப்படைக்குமாறு - பெண்ணின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்தார்.

இவரது முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்ட மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி றுவான் சந்திரசேகர - உடனடியாகக் காரியத்தில் இறங்கினார்.

இவரது முயற்சியால் - அப்பெண் தற்போது தங்கியிருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நண்பகல் பெண்ணின் தாயாரை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பு அலுவலகத்திற்கு அழைத்து - அப்பெண் தாயிடம் கையளிக்கப்பட்டார். இதன்போது, பதினாறு வருடங்களாகச் சந்திக்காத தாயும், மகளும் ஒருவரையொருவர் கட்டித்தழுவி அழுதது பார்ப்போரின் நெஞ்சத்தை உருக்குவதாக இருந்தது. பின்னர், தாயார் மகளை வீட்டிற்கு அழைத்துச்சென்றார்.

(லி)

# ஆசிரியர், மாணவர் சகலரும் பொங்கு தமிழில் இணையுங்கள்!

## கல்வி மேம்பாட்டுப் பேரவை அழைப்பு

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் சகல ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொள்வதன்மூலம் தமது பூரண ஆதரவினை வழங்கவேண்டுமென்று, யாழ்மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை - சகல ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

பல்கலைக்கழக சமூகம் நடத்துகின்ற 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சிக்கு நாம் எல்லோரும் எங்களுடைய ஆதரவினை நல்கவேண்டும். போரினை முடிவுக்குக் கொண்டுவந்து - படையினர் தத்தம் வீடுகளுக்குச் செல்லவும், நாம் இழந்த எங்கள் பிரதேசங்களிலே உரிமையுடனும், நிம்மதியுடனும் வாழவும் இந்த 'பொங்கு தமிழ்' எழுச்சி வேண்டிநிற்கிறது.

எல்லோரும் தத்தம் பாடசாலைகளை 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழச்சிக்காகத் தயார்செய்யுங்கள். மங்காத தமிழும், தமிழ் மக்களும் முன்னர் பொங்கி எழுந்ததுபோல, மீண்டும் எழுவதற்கு இந்நிகழ்ச்சியினை முன்னெடுங்கள்.

குறிப்பாக, கல்விச் சமூகத்தினராகிய நாம் எவற்றையெல்லாம் இழந்துள்ளோம் என்பது பற்றி எண்ண வேண்டியுள்ளது. எத்தனை பாடசாலைகள் இன்னும் இராணுவக் கெடுபிடிக்குள்ளே இருக்கின்றன. பல்வேறு பாரபட்சமான அரச நடவடிக்கைகளாலே எம்முடைய கல்வித்தரம் மிகமோசமான முறையிலே கீழே சென்றுகொண்டிருக்கிறது.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைச் சரியானமுறையிலே நிறைவேற்றுவதற்கு ஏற்றவளங்கள் இல்லாமலிருக்கின்றோம். இவற்றுக்கெல்லாம் அரசு சரியான தீர்வினை எமக்குத் தரவேண்டும். இந்த 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியூடாக நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே குரலில் 'எங்கள் நலம் எங்களுடையது' என்று கூறுவதற்குத் தீர்மானித்துக் கொள்ளுவோம் என்றும் யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை கல்விச் சமூகத்தினருக்கு அழைப்புவிடுத்துள்ளது.

# சூழல் அபிவிருத்தி அலுவலகம் யாழ். செயலகத்தில் அமையும்

## உயரதிகாரிகள் கொழும்பிலிருந்து வந்தனர்

மத்தியசூழல் அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகம் ஒன்று, யாழ். அரச செய்லகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக- மத்திய சூழல் அதிகாரசபையின் உயரதிகாரிகள் மூவர் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர்.

மத்தியசூழல் அதிகாரசபையின் செயலாளர் நாயகம் மானில் ஜயமான்ன, பணிப்பாளர் விஜேசூரிய, பணிப்பாளர் முத்துக்குடவாச்சி ஆகியோரே நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தனர். யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இவர்கள் - யாழ்.அரச அதிபர் பணிமனையில் கலந்துரை யாடல் ஒன்றினை நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் யாழ். அரசாங்க அதிபர் பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல், திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, திட்டமிடல் பணிப்பாளர் சிவபாதம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது - யாழ்ப்பாணத்தில் சூழல் அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகம் ஒன்று திறக்கப்படுமாயின் - அது யாழ்ப்பாண சூழலுக்கேற்றதாக, யாழ்ப்பாண மக்களின் நலனை முன்னிலைப்படுத்துவதாக அமையவேண்டும். இதற்கென யாழ்ப்பாணத்திலுள்ள சூழல் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், இத்திட்டங்களின் அடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தில் சூழல் சுகாதாரசபையின் பிராந்திய அலுவலகம் இயங்கவேண்டும் என்றும் யாழ். அரசாங்க அதிபர் வலியுறுத்தினார். (லி)

# தமிழகத்திலிருந்து கடல் வழியே 15 அகதிகள் நெடுந்தீவு வந்தனர்

(நெடுந்தீவு)

தமிழகம் - தங்கச்சி மடத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த பதினைந்து பேர், நேற்றுமுன்தினம் அதிகாலை தாயகம் திரும்பினர்.

தமிழகத்திலுள்ள தங்கச்சி மடத்திலிருந்து, கடல்வழியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிக்குப் புறப்பட்ட இவர்கள், நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் நெடுந்தீவு மேற்கிலுள்ள பனங்காணிப் பகுதியை வந்தடைந்தனர்.

தமிழக அகதிகள் நெடுந்தீவுக் கடலில் வந்துகொண்டிருப்பதாக, மீனவர்களால் நேற்றுமுன்தினம் காலை நெடுந்தீவுக் கிராமசேவையாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, கிராமசேவையாளர் - நெடுந்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததன் நிமித்தம், நெடுந்தீவுப் பொலிஸார் இவர்கள் ஒவ்வொருவரையும் தீவிரமாகப் பரிசோதனைக்குட்படுத்தி, தனித்தனியாக வாக்குமூலங்களைப் பெற்றதன் பின்னரே, உள்நுழைய அனுமதித்தனர்.

இவர்களை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பொறுப்பேற்று, நெடுந்தீவுப் பிரதேச சபைப் பொது நூலகத்தில் தங்கவைக்க ஒழுங்குகள் செய்தார்.

இம்மக்களுக்குத் தேவையான உதவிகளையும், உணவுகளையும் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் வழங்கியுள்ளது.

தமிழக அகதிமுகாமிலிருந்து நெடுந்தீவுவந்த பதினைந்து பேரினதும் பெயர், விபரங்கள் வருமாறு-

பு.சதானந்தராசா (வயது 37, அச்சுவேலி), வே.குமாரவேலு (வயது 34, மன்னார்), இ.ப.விஜயரத்தினம் (வயது 43, வவுனியா), து.தமிழ்மணி (வயது 43, மன்னார்), இ.பீரியஸ் (வயது 45, மன்னார்), சோ.கருணாகரன் (வயது 32, யாழ்ப்பாணம்), க.பிரவீன் (வயது 3, யாழ்ப்பாணம்), தா.கேசவமணி (வயது 43, முருங்கன்), கே.சறோசா (வயது 33, முருங்கன்), கே.அரவிந்தராஜ் (வயது 9, முருங்கன்), சு.திலககுமாரி (வயது 25, வவுனியா), சோ.சுந்தரமூர்ததி (வயது 22, வவுனியா), சோ.கிருத்திகா (வயது 6, வவுனியா), சோ.தவமணி (வயது 57, முருங்கன்) மற்றும் ஒன்றரை மாதக் குழந்தையொன்றுமே நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தவர்கள் ஆவர்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

ஒன்றுதிரண்டால் உண்டு மிடுக்கு
- தமிழ்ப்பழமொழி

# நமது நோக்கு

## ஒலிக்கட்டும் உரிமைக்குரல்!

ஒன்றுபட்ட குரலில் தமிழ்மக்களின் உள்ளக்கிடக்கையை உலகிற்கு எடுத்துச் சொல்லும் 'பொங்கு தமிழ' எழுச்சி நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவருவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

'பொங்கு தமிழ' நிகழ்வை தமிழ்மக்களின் பேரெழுச்சிக் குரலாக ஒலிக்கச் செய்வதற்கு - பல்கலைக்கழக மாணவர்களோடு - பொது அமைப்புக்கள், மனிதநேய நிறுவனங்கள், கல்விசார் சமூகம், தொழிற்சங்கங்கள், அரச, தனியார் நிறுவன ஊழியர்கள், அரசியற்கட்சிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பிலிருந்து பேராதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளியன்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் இந்நிகழ்வு - சர்வதேசத்தினதும், ஊடகங்களினதும் கவனத்தையும் பெரிதும் ஈர்த்துள்ளது.

அமைதி முயற்சிகள் பற்றித் தமிழ்மக்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை, பொங்கு தமிழின் வழியே அறிந்து கொள்வதற்கும்.

தமிழ்மக்களின் உணர்வைத் தெரிந்துகொள்வதற்கும் சர்வதேச சமூகம் ஆவலாயிருப்பதையும் அறியமுடிகின்றது.

'பொங்கு தமிழ' நிகழ்வென்பது - தனியே மக்கள் அணிதிரளும் வைபவமாக மட்டுமல்லாது, அது - மக்களின் எழுச்சிமிக்கதொரு செய்தியையும் வெளிப்படுத்தி நிற்பதாகவே கருதமுடியும். இந்த வகையில் - மக்களின் செய்தி என்னவென்பதில் அனைவரும் கருத்தூன்றிநிற்கும் வேளையில் - 'பொங்கு தமிழ்' கொண்டிருக்கும் முக்கியத்துவம், இன்றைய சூழ்நிலையில் மிகக்காத்திரமானதாக அமைகின்றது.

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதையும், அவர்களுடன் பேசுவதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதையும் வலியுறுத்திய அன்றைய 'பொங்கு தமிழ்' - இன்று தமிழ் மக்களின் வாழ்வாதாரத்திற்கு முட்டுக்கட்டையாயிருக்கும், தமிழர் தம் சொந்தநிலத்தை ஆக்கிரமித்து நிற்கும் படையினர் அகன்று - மக்களது சுமுகவாழ்வை உறுதிப்படுத்துமாறு அனைத்துத் தரப்பிடமும் வேண்டி நிற்கிறது.

இந்தப் பொங்கு தமிழின் தொனிப்பொருள் - "எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காய் படையினரே- நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என அமைந்திருப்பது - தமிழ்மண்ணில் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் மனித அவலத்தின் உயிர்த்துடிப்பாக,

அந்த அவலத்தைத் தீர்க்கவல்ல நியாயமான வழியைச் சுட்டி நிற்பதாக அமைந்திருக்கின்றது.

இன்றைய 'பொங்கு தமிழின் இந்த மகுடவரிகள்- போரையோ, போரிற்கான சூழலையோ தமிழ்மக்களிடமிருந்து வெளிப்படுத்தவில்லை என்பதையும் - அவர்களுக்குரிய அடிப்படை உரிமையைக் கோரி நிற்பதையே எடுத்துக்காட்டுவதையும் சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன் றியப் பிரதிநிதிகள், கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் கரீனா எரிக்சனைச் சந்தித்த போது - அவர் கூறிய 'நீங்கள் உங்களது இடத்திற்குச் செல்ல நினைப்பதும், மக்களை ஒன்றிணைப்பதும் உங்கள் உரிமை' என்ற தெளிவான புரிந்துகொள்ளல் - சர்வதேசத்திற்கு ஒரு முன்மாதிரியாகும்.

இடம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு குடும்பமும், தமது சொந்த இடங்களுக்குச் சென்று, சொந்த வீடுகளில் வாழ்வது உறுதியாகும்போதே - அவர்களுக்கு சமாதானத்தின் விளைவு கைக்கெட்டியதாகும்.

அகதி முகாம்களிலும் - அடுத்தவர் வீடுகளிலும் அவலமானதொரு வாழ்வை வாழ்ந்துகொண்டு - தொழில் வாய்ப்புக்களின்றியும், அடிப்படை வசதிகளுக்கே அல்லாடுகின்ற நிலைமையும் - அவர்களுக்கு அமைதியைத் தெரிந்துகொள்ள ஒருபோதும் சந்தர்ப்பமளிக்காது

மக்கள் தாம் திரும்பிச் சென்று தமது - வீடுகளில் வாழக் கேட்பதென்பது - அரசாங்கத்திடமோ, படைகளிடமோ கேட்கப்படவேண்டிய சலுகையல்ல. அது அடிப்படை உரிமை. சொந்த வீட்டில் வாழும் இந்த அடிப்படை உரிமையை - ஐ.நா. முதல் அனைத்து மனித உரிமை அமைப்புக்களும் வலியுறுத்தியிருக்கும் வேளையில் - இந்த அடிப்படை உரிமையைப் பெறவே தடுக்கப்பட்டவர்களாகத் தமிழ்மக்கள் உழலுவதைச் சர்வதேசம் கருத்திற்கொள்ள வேண்டும்.

இந்தவகையில் - பொங்குதமிழில் ஒவ்வொருவருமே நேரில் பங்கேற்று - இராணுவப் பிரசன்னம் அகன்ற சூழலில் சுதந்திரமான, அழுத்தங்களற்ற சுமுகவாழ்வை ஏற்படுத்துவதற்குரிய ஏகோபித்த உணர்வை சர்வதேசத்திற்கு வெளிக்காட்டவேண்டும்.

இன்றைய சமாதான முயற்சிகள், நிரந்தர அமைதிக்குரிய திசையில் நகர்வதற்கும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேறவும் - பொங்குதமிழ் வழிதர, அனைவரும் வெள்ளியன்று அணிதிரண்டு - தமிழர்தம் உரிமைக்காய் குரல்கொடுக்க வேண்டியது வரலாற்றுக்கடமையென்பதை உணர்ந்தவர்களாவோம்.

# பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு எமது பலத்தை வெளிப்படுத்துவோம்!

## தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

"நாங்கள் எங்கள் வீட்டிற்குச் செல்வதற்கு இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளிற்குச் செல்லுங்கள்" என்ற தொனிப்பொருளில், பல்கலைக்கழக மாணவர்களினால் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக உணர்ச்சியுடனும், எழுச்சியுடனும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், இடைநிறுத்தப்பட்டுள்ள அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பித்தல், உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக்குடியமர வைத்தல், சகல அதிகாரங்களும் கொண்ட வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் வழங்குதல் போன்ற மிகவும் முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து, மிக அமைதியான முறையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்ச்சியில் - கல்விச் சமூகத்தினரான அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள், தேசிய கல்வியற்கல்லூரி பயிற்சி ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள் யாவரும் கலந்து எமது ஒற்றுமையையும், பலத்தையும் தென்பகுதிக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தவேண்டியது எமது பாரிய கடமையாகும்.

புலிகள் - ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாமைக்கான உண்மையான, அடிப்படையான காரணங்களை உணராமல், சர்வதேச சமூகம் தமிழ்மக்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற இவ்வேளையில், இயல்புவாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்காக, அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளைத் தென்பகுதிக்கும், சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்த, யாழ்.குடாநாட்டு மக்கள் யாவரும், வேறுபாடின்றி ஒரே இடத்தில் சங்கமித்து உரத்த குரல் எழுப்பவேண்டியது அவசியமானதென இலங்கைத் தழிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




குருகுலம் மற்றும் காந்திநிலைய இல்லங்களின் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் சிறுவர்களுக்காக, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை கிளிநொச்சி அரச அதிபர் இராஜநாயகம திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், சிறார்கள் அணிவகுத்து நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சுதந்திரமாக வாழ முடிந்தாலே மனிதவாழ்வு மேன்மையடையும்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் உரை

(நல்லூர்)

"மனித வாழ்வியல் மேன்மையடைய வேண்டுமெனில், மனிதனைச் சூழவுள்ள தடைகள் நீக்கப்பட்டு, அவன் சுதந்திரமானவனாக வாழவேண்டும், அப்போதே மேன்மை சாத்தியமாகும்" -

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளின் மகளிருக்கான பாசறை நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். சங்கத்தின் செயலாளர் வை.தயாமோகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றியபோது தெரிவித்தாவது-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் செயற்படுபவன் வாழ்வில் சிறப்படைவான். எமது இலட்சியம் - எமது மக்கள் அனைத்துத் தடைகளிலுமிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதே.

அந்தவகையில், சமூகத்தில் சேவையாற்றவுள்ள நீங்கள் சிறந்த சமூகப்பற்றாளராக இருக்கவேண்டும். ஒரு சமூகப் பற்றாளனே, தேசப்பற்றாளனாகவும் இருப்பான்.

நாம் ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளாதது குறித்து, உங்களுக்குள் பல வினாக்கள் இருக்கலாம். நாம் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால், பெருமளவு நிதியைப் பெற்றிருக்க முடியும் ஆனால், அவை உரியமுறையில் மக்களைச் சென்றடைய ஒரு நிர்வாகக் கட்டமைப்பு அவசியமாகும் என்பதை வலியுறுத்தியே நாம் எமது நிலைப்பாட்டை அறிவித்தோம்.

பெறப்படும் நிதியில் பெரும்பாலான பங்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகச் செலவீனங்களுக்கும், இதரதேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதால், மக்களைச் சென்றடைவது மிகச்சொற்பமே. பெறப்படும் நிதி எமது மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்பதே எமது விருப்பம் எனத் தெரிவித்தார்.

மேற்படி பாசறை நிகழ்வில் - முப்பதிற்கும் மேற்பட்ட யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலிருந்து 450 இற்கும் அதிகமான மாணவிகள் கலந்துகொண்டனர்.

பாசறையில் நடைபெற்ற போட்டிகளில் -

வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

(57)

# முப்பது சிங்கள மாணவர்கள் யாழ்.பல்கலையில் கற்கின்றனர்!

## துணைவேந்தர் மோகனதாஸ் தகவல்

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போது முப்பது சிங்கள மாணவர்கள் கல்விகற்று வருவதாக, துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்தார்.

பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில், குறைந்த விடுதி வசதிகளுடன்தான் மாணவர்கள் கல்விகற்று வருவதாகவும், ஆயிரம் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உதவ வேண்டும் என்றும், இங்கு மீன்பிடி சம்பந்தமான பட்டப்படிப்பு ஆரம்பிக்க அனுமதிகோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார். இங்கு கடற்தொழில் முக்கியமான தொழிலாக இருப்பதால், மீன்பிடிப் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்படுவது அவசியம் என்றும் -

தற்போது 6260 பட்டப்படிப்பு மாணவர்களும், 963 பட்டப்பின் படிப்பு மாணவர்களும் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருவதாகவும் துணைவேந்தர் மோகனதாஸ் தெரிவித்தார்.

# தரம் ஒன்று அதிபர்களுக்கு சம்பள நிலுவையை வழங்குக!

## உயர் நீதிமன்றம் கல்வி அமைச்சுக்கு உத்தரவு

இலங்கை அதிப்ர் சேவை தரம் 1 இல் உள்ளோருக்கு சம்பள அதிகரிப்பையும், நிலுவைச் சம்பளத்தையும் வழங்குமாறு உயர் நீதிமன்றம் கல்வியமைச்சுக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

1995 ஜனவரி முதலாம் திகதி, இலங்கை அதிபர் சேவை தரம் 1 இல் தெரிவானவருக்கான அளவுத் திட்டம், ஏனைய அதிபர், ஆசிரியர் சேவையுடன் ஒப்பிடும்போது - குறைவானது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகளை, விசாரித்த நீதிபதிகள் 1995 ஜனவரி முதல், 1996 டிசம்பர் வரையான காலப்பகுதிகளுக்கு - 109,800 ரூபா - 10x4200 ரூபா, 157,000 என்ற சம்பளத்திட்டத்துக்கு அமைய தரம் 1 அதிபர்களுக்கு சம்பளத்தை வழங்கும்படியும், அத்துடன் சம்பள அதிகரிப்பு, நிலுவைகளை வழங்குமாறும் தீர்ப்பளித்தது.

இதையடுத்து, கல்வியமைச்சின் செயலாளர் வி.கே.எஸ். நாணயக்கார, மேற்படி நீதிமன்ற உத்தரவிற்கமைவாக சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

# புலிகளின் கப்பல்கள் மீதான தாக்குதல்கள்; எதிர்பார்ப்புக்கு மாறான விளைவுகளையே தரும்!

இலங்கைத்தீவின் வரலாற்றில் இந்த மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை மற்றுமொரு கரிபடிந்த, நயவஞ்சகத்தைப் பதித்துச் சென்றிருக்கிறது சிங்கள இனவாதம். போர் தவிர்ப்புக் காலத்தில் தமிழர் தரப்பின் மற்றுமொரு கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக் காவுகொள்ளப்பட்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னான காலத்தில் - இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்கவென உருவகம் பெற்ற கண்காணிப்புக்குழு, மீண்டுமொருமுறை அரசதரப்பின் ஏமாற்றுதலுக்குள் சிக்குப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தொடர்ந்துவரும் இச்சம்பவங்கள் சமாதானத்தையும் மீறி, தமிழர் தரப்பின் மீதான அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டிய தேவை, இலங்கை அரசுக்கும் அதுசார் சக்திகளுக்கும் எழுந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

மறுபுறத்தே, சமாதானப் பயணிப்பின் பலிக்கடாவாக்கப்படும் அபாயம் தமிழர் தரப்பைச் சூழ்ந்துள்ளதோ என்ற எண்ணம், தமிழ்த் தேசிய ஆதரவாளர்களிடையே தோற்றம் பெற்றுள்ளதோடு, இத்தாக்குதல்கள் தமிழர் தரப்பின்மீது ஈடுகட்ட முடியாத இழப்புக்களையும் ஏற்படுத்தி நிற்கிறது.

மார்ச் 10 ஆம் திகதி 'எம்.ரி. கொய்மார்' என்ற வணிகக் கலத்தின் மீதும், ஜூன் 14 ஆம் திகதி 'எம்.ரி.சோஷின்' என்ற வணிகக் கலத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் ஏற்படுத்தியுள்ள உயிரிழப்புக்கள் மற்றும் பொருள் இழப்புக்கள்



வே. பிரபாகரன்

போர்க் காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறற்றவையாகவும், மீண்டும் வலிந்த போரொன்றைத் திணிப்பதற்கான முயற்சியாகவும் அமையப்பெற்றுள்ளது.

குறிப்பாக, ஈரூடக அரசியலில் சிக்கித்தவிக்கும் சிங்களத்தின் தலைமைகள் இரண்டுமே ஒரே இலக்கை நோக்கியே பயணித்துக்கொண்டிருக்கின்றன. அதாவது, ரணில் தலைமையிலான நாடாளுமன்ற அரசு சமாதானப் பொறிக்குள் தமிழர் தரப்பைத் தள்ளிவிட்டு, அவர்களைச் சர்வதேசத்திற்குப் பதில் சொல்லவேண்டியவர்களாக மாற்றுவதில் முனைப்புக்கொண்டு செயற்படுகிறது.

சந்திரிகாவோ நிழலரச தோற்றத்தை இல்லாதொழித்துவிட்டால், தமிழீழம் அமையாது என்கிற நம்பிக்கையில், அதற்கான செயற்பாடுகளைத் தொடர்ந்து வருகிறார். இவ்வாறு சிங்களத்தின் ஈரூடகத் தலைமைகளுமே தமிழீழத்தின் பிறப்பு தவிர்க்கப்படவேண்டும் என்கிற அடிப்படையிலேயே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழீழத்தின் பிறப்பு என்கிற பயம் சிங்களத்தை மட்டும் ஆட்டிப்படைக்கிற ஒரு நிகழ்வாக இல்லாமல், பிராந்திய நாடுகளையும், வல்லரசுகளையும் ஆட்டிப்படைக்கிற அளவிற்கு வளர்ந்துள்ளதானது, இன்றைய இந்நிகழ்வுகளுக்கான ஒரு காரணியாக அமைந்துள்ளது.

குறிப்பாக - தமிழர் தரப்பு, தென்னாசியாவின் தவிர்க்க முடியாத சக்தியாக, இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் புதிய பிரசன்னமாக உருவகித்துவிட்டனர் என்கிற உண்மையை ஏற்கமுடியாத ஒரு தன்மையானதாகவே, இவ்வாறான நெருக்குதல்கள் தோற்றமளிக்கின்றன.

எனினும், போர்நிறுத்த ஒப்பந்த காலத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த வன்மங்கள் முன்னெப்போதையும் விட, எதிரிகள் விழிப்பாகச் செயற்படுகிறார்கள் என்பதைக் காட்டிநிற்கிறது.

கண்காணிப்புக் குழுவின் சமபலம் பேணல் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களே இவ்வாறான பயத்திற்கான அடிநாதமாகியது.

குறிப்பாக, கண்காணிப்புக் குழுவின் முன்னைய தலைவர் "புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்பிருந்த இராணுவபலம் பேணப்படாதவிடத்து, அது குழப்பான ஒரு நிலைக்குப் பிரச்சினையை இட்டுச்செல்லும்" எனப் பேட்டியொன்றில் தெரிவித்ததோடு, "விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இது தவிர்க்கமுடியாதபடி இன்றியமையாதது. ஏனெனில், இலங்கையைப் போன்ற அரச இயந்திர கட்டமைப்பையோ அல்லது சர்வதேச ஆதரவையோ அவர்கள் கொண்டிருக்கவில்லை" எனத் தெரிவித்திருந்தார்.



தாக்கி அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பல் - கண்காணிப்பு விமானமொன்று எடுத்த படம் -

இதுவே இலங்கை அரசுக்கும் - அது சார்ந்தவர்களுக்கும் யதார்த்தை உணரவைக்கிற ஆரம்பப் புள்ளியாக அமைந்திருந்தது.

ஏனெனில், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னான காலத்திலிருந்த பலத்தை, ஒப்பந்த காலத்திலும் தக்கவைத்தல் என்பது, இருதரப்பினருக்கும் பயன்பாடுள்ளதாக இருந்தாலும், தமிழர் தரப்பின் நிழலரச செயற்பாடுகள் அங்கீகாரம் பெறும் தன்மையை இது ஏற்படுத்திவிடும் என்பதை, அரசதரப்புத் தாராளமாக உணரத்தொடங்கியது.

இக்காலகட்டத்தில் வெளியிடப்பட்ட "சமபலம் பேணல் என்பது இரு தரப்பிற்கும் மிகமுக்கியமான செயற்பாடு. புரிந்துணர்வு ஒப்பந்தம் உயிர்ப்புடன் இருக்க இது இன்றியமையாத நடவடிக்கை. எனவே, தத்தமது படைத்தரப்பிற்கு ஆட்களை இணைத்தல், பயிற்சி என்பன சமபலம் பேணலின் வழமையான ஒரு அங்கமேதவிர, போருக்குத் தயார்படுத்தல் என்றாகாது" என்கிற கண்காணிப்புக் குழுவின் அறிவிப்பு இலங்கை அரசுக்கு மேலும் தலையிடியைக் கூட்டியது.

இதுவே தமிழர் தரப்பினரின் கடற்கலங்கள் மற்றும் வணிகக்கப்பல்கள் மீதான கண்காணிப்பு மற்றும் வேவு தொடர்பான ஆலோசனைகளை உள்வாங்குவதற்கு இந்தியா உள்ளிட்ட சிலநாடுகளை அரசதரப்பு நாடுவதற்கு ஏதுவாயமைந்தது.

குறிப்பாக - இந்தியாவிடமிருந்து உளவு மற்றும் கண்காணிப்புத் தகவல்களைப் பெறுவதற்கான முயற்சிகளில் இலங்கையின் ஈரூடகத் தலைமைகள் ஒருமித்தே பயணித்தன.

பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் தொடர்பாக இந்தியாவுடன் ஆழ - அகலத் தொடர்புபேணலைத் தாம் மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்ற அரசு சார்பில் மிலிந்த மொறகொடவும், இலங்கைத் தீவு சார்பாக உண்மையான அக்கறையை இந்தியா மாத்திரமே கொண்டிருக்கமுடியும் எனவும், டெல்கி அரசு இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கத் தம்மாலான முழு உதவிகளையும் வழங்கவேண்டுமென சந்திரிகாவும் வேண்டுகோள் விடுத்துள்ளமை இதனைத் தெளிவுபடுத்தி நின்கின்றது.

தமிழர் தரப்பின் மீதான தமது கணிப்புக்களைப் பொய்யாக்கி, அவர்கள் மேற்கொண்ட இராஜதந்திர உறவு புதுப்பித்தல் மற்றும் இராஜதந்திரக் காய்நகர்த்தல் என்பனவற்றை ஜீரணிக்க முடியாதிருந்த இந்தியா, வரலாற்றில் மீண்டுமொருமுறை சிங்களத்தின் வேண்டுகோளுக்குத் தலைசாய்க்குமளவிற்குத் தரமிறங்கியது.

## சுதர்மா

பழைய கற்பிதங்கள் காரணமாக - இனி நாம் கையைச் சுட்டுக்கொள்ளமாட்டோம் எனத் தெரிவித்து வந்த இந்தியா, இவ்வாறு செயற்படுவதற்குத் தமிழர் தரப்பினருக்கு அனைத்துலக அரங்கில் கிடைத்த வரவேற்பு மற்றும் நிழலரச அங்கீகாரம் என்பனவற்றைத் தவிர வேறு எதையுமே காரணமாக எடுக்கமுடியாது.

இதுவே உளவு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலமான தகவல்களைப் பரிமாற அதனை உந்தியது. இதற்கான சாட்சியமாக மார்ச் 10 ஆம் திகதி 'எம்.ரி.கொய்மார்' என்னும் வணிகக் கலம் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றது.

எனினும், இது தொடர்பான விசாரணைகளின்போது - பெறப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகள் அரசாங்கத்தால், கண்காணிப்புக் குழு திட்டமிட்டு ஏமாற்றப்பட்டிருக்கிறது அல்லது பகடைக்காய்களாகப் பாவிக்கப்படுகிறது என்ற உண்மையைத் தெளிவுபடுத்தியது. அத்தோடு, கண்காணிப்புக் குழு கடற் புலிகளின் செயற்பாடுகள் மற்றும் போக்குவரத்துத் தொடர்பான ஒரு நிரந்தரமுடிவை அறிவிக்கவேண்டும் என்ற தேவையையும், இலங்கையின் வணிகக்கல அழிப்புச் சம்பவம் ஏற்படுத்தி நின்றது.

இதுவே, கடற்புலிகளை ஒரு நிழலரச கடற்படையாக **(De Facto Naval Unit)** அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும், அத்தோடு, கடற்புலிகள் பயிற்சி மற்றும் ஒத்திகைகளில் ஈடுபடுதல், சமபலம் பேண அவசியம் என்றும் பரிந்துரைத்தது.

ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிய இந்த அறிவிப்பானது தமிழீழ நிழலரச செயற்பாடுகளை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தும் சம்பவமாக அமைந்தது.

எந்தவொரு செயற்பாட்டையும் இல்லாது செய்வதற்காக இலங்கையும், இந்தியாவும் செயற்பட்டனவோ, அந்தச் செயற்பாடே அங்கீகாரம் பெறவேண்டிய தேவை அறிவிக்கப்பட்டதானது, மேற்குறிப்பிட்ட தரப்புக்களை ஆட்டங்காண வைத்திருக்கும்.

குறிப்பாக - கண்காணிப்புக் குழுவின் அறிவிப்பில் 'நிழலரச படையணி' என்கிற வார்த்தைப் பதம் இடம்பெற்றதானது நிலைமையின் தாற்பரியத்தை உரைத்துநின்றது. குறிப்பாக, இந்துசமுத்திரத்தின் கிழக்குக்கரையில் கடந்த வருடமே உதயமான கிழக்குத் தீமோர் என்கிற நாடு, தமிழீழத்தின் பிறப்பிற்கான சாத்தியத்தை உரைத்துநிற்கிறது என்பதும், போராடிப் பின்னர் பேச்சுக்களின் மூலமே கிழக்குத் தீமோர் நாடு என்கிற அங்கீகாரத்தைப் பெற்றது என்ற யதார்த்தம் இந்தியாவையும், இலங்கையையும் கலங்கவைத்து நிற்கும் ஒரு விடயமாகும்.

இதன் காரணமாகவோ என்னவோ, மீண்டுமொருமுறை



சந்திரிகா குமாரதுங்க

கண்காணிப்புக் குழு தவிர்க்கப்பட்டு, மிகவும் திட்டமிட்டு சர்வதேசக் கடற்பரப்பில் கபடம் அரங்கேறியிருக்கிறது.

தாங்கள் பூரணமாக ஏமாற்றப்பட்டுள்ளோம் என்ற கருத்தைக் கொண்டவர்களாகவே கண்காணிப்புக் குழுவினர் இன்றைய திகதியில் காட்சிதருகிறார்கள். இருந்தும், இச்சம்பவம் குறித்து அவர்கள் வழங்கும் நியாயப்பாடே சமாதானத்தின் ஆயுளை நிர்ணயிக்கும் காரணியாக அமையவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அரசதரப்பில் ஜனாதிபதி, பாதுகாப்பமைச்சர், இராணுவப்பேச்சாளர், கடற்படை என நான்கு பிரிவுகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகளும் முரண்பட்ட தோற்றத்தையுடையனவாகி, திட்டமிட்ட செயற்பாடே இது என்பதற்கான சாட்சியமாக அமைந்துள்ளன.

எட்டு வருடங்களுக்கு மேலாகச் செயற்பட்டுவரும் தமிழீழ நிழலரசில் கடற்புலிகளின் பங்கு அளப்பரியதே. ஆனால், அவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவென காலங்கடந்து இலங்கையும், இந்தியாவும் மேற்கொள்ளும் செயற்பாடுகள் அவற்றின் விருப்பிற்கு எதிர்மாறான விளைவுகளையே தந்துநிற்கும் என்பதே இன்றைய யதார்த்தம்.

உதாரணமாக, ரோக்கியோவில் நிதிவழங்கும் நாடுகள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வுக்கு வலியுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன. இது கூட, நிழலரசின் செயற்பாட்டினை ஏற்றுகொண்டதன் காரணமாக - அவற்றின் போக்கில் ஏற்பட்டதொரு பாரிய மாற்றமாகும்.

இவ்வாறானதொரு நிலையில் மீண்டும் தவறான பாதையைத் தேர்ந்தெடுப்பது இந்தியாவுக்குத் தவறான கற்பிதங்களையே வழங்கும்.

மறுபுறத்தே, தமிழ்த் தேசியத்தின்பாற்பட்டு இந்நிகழ்வுகளை நோக்கினால், என்ன காரணத்திற்காகவும் இந்த இழப்புக்கள் நியாயப்படுத்தப்பட முடியாதவை, இவ்வாறான தாக்குதல்கள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியவை.

குறிப்பாக, கண்காணிப்புக் குழுவின் பிரசன்னத்துடனான ஒரு போர்நிறுத்த காலத்தில், அவர்களின் பயன்பாடு - இது விடயத்தில் இலங்கை அரசால் பெறப்பட்டிருந்தால், இவ்வாறான அளப்பரிய உயிரிழப்புக்களும், பொருள் இழப்புக்களும் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

எனவே, சமாதானத்தை இறுகப்பற்றியபடி பயணிக்கும் அதேவேளை, தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் சிந்தனைத் துளிகளில் ஒன்றான 'தலையிடியைத் தந்தவனுக்கே அதனைத் திருப்பிக்கொடு' என்கிற வார்த்தைப் பதமும் செயல்வடிவம் பெறவேண்டிய காலகட்டமும் இதுவாகும். ❖







திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியில், வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட, ஓவியக் கண்காட்சியில் - மங்கள விளக்கேற்றப்படுவதை முதற்படத்திலும், இந்த நிகழ்வில் 'தூரிகை' என்ற நூலை ஆளுநரின் செயலாளர் அமிர்தலிங்கம், மாகாணக் கலாசாரப் பணிப்பாளர் ஜேசுதாஸிடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும், கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஓவியங்களை ஏனைய படங்களிலும் காணலாம். (படம்:-கௌதமன்)

# 40,000 பேர் கொண்ட புதிய இராணுவம்; ஈராக்கில் அமைக்க அமெரிக்கா முயற்சி!



அமெரிக்காவுக்கு எதிரான ஈராக்கியர் வன்மம்

ஈராக்கில் - அந்நாட்டவர்களைக் கொண்டு புதிய இராணுவத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில், அங்குள்ள அமெரிக்கப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கிய இடைக்கால நிர்வாகம் - இது தொடர்பாகத் தெரிவிக்கும்போது -

சதாம் ஹுசைனின் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தில் பணியாற்றியவர்களைக் கொண்டு - புதிய இராணுவத்தை அமைப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் - ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தி வரும் - முன்னாள் இராணுவத்தினரைச் சாந்தப்படுத்தவே, இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இன்னும் மூன்று வருடங்களுக்குள், 40,000 படையினரைக் கொண்டதான ஈராக்கிய இராணுவத்தை அமைத்துவிடலாமெனவும் -

இந்தப் படைகளுக்கான பயிற்சிகள் அனைத்தும் அமெரிக்க ஜெனரல் ஒருவராலேயே வழங்கப்படும் எனவும், ஈராக்கின் இடைக்கால நிர்வாகத்துக்கான சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகர் வோல்ர்ர் ஸ்லோகொம்பே தெரிவித்தார்.

புதிய இராணுவம் - ஈராக்கின் எல்லைகளைக் காப்பது, முக்கிய தளங்களைப் பாதுகாப்பது உட்பட தேசிய இராணுவத்துக்குரிய சகல பணிகளையும் மேற்கொள்ளும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை - ஈராக்கில் புனர்நிர்மாணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளில் பயிற்சிபெறுவதற்காக - பன்னிரண்டு ஈராக்கியர்களை ஐ.நா. அதிகாரிகள் நியூயோர்க்கிற்கு அழைத்துள்ளனர்.




ஈராக்கிற்கு எதிராகப் போரைத் தொடங்குவதற்காக, அங்கு பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் பொய் சொன்னாரென- எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டமொன்று நியூயோர்க்கில் நடந்தது. அங்கு புஷ்ஷுக்கு எதிராகக் கோஷமிடும் அமெரிக்கர்களில் இவரும் ஒருவர்.

### சதாமைக் குறிவைத்த தாக்குதல்

## ஐந்து சிரியப் படையினர் காயமடைந்ததாகத் தகவல்!

ஈராக்கிற்கும் சிரியாவிற்கும் இடையிலான எல்லைப்புறமருகே, வாகன அணியொன்றின் மீது நடத்தப்பட்ட அமெரிக்காவின் ஆளில்லா விமானமொன்றின் ஏவுகணைத் தாக்குதலில் - ஐந்து சிரிய நாட்டு எல்லைப்படை வீரர்கள் காயமுற்றிருப்பது தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் - சதாம் ஹுசைன் அல்லது அவரது இரு மகன்களில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கலாம் என, அமெரிக்க அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். ஆனால், இது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

இதேவேளை - மேற்படி தாக்குதல் சம்பந்தமாக, சிரியாவுடன் தான் பேசியிருப்பதாக ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படையின் பேச்சாளர் லெப்ரினன்ட் கேணல் ஹாரி கிக் கூறினார். கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர், ஏசி-130 ரக தாக்குதல் ஹெலிகள் சகிதம், ஆளில்லா விமானத்தைக் கொண்டு அமெரிக்கா இத்தாக்குதலை நடத்தியிருந்தது.

இத்தாக்குதலில் சதாம் அல்லது அவரது இரு மகன்களில் ஒருவர் கொல்லப்பட்டது பற்றி உறுதிப்படுத்த, டி.என்.ஏ பரிசோதனைகளை மேற்கொள்ள - சம்பவம் நடந்த இடத்திலிருந்து, அமெரிக்க அதிகாரிகள் மாதிரிகளைச் சேகரித்துள்ளனர்.

## காஸாவில் இஸ்ரேலியப் படை தேடுதல்: நூறு பலஸ்தீனர்கள் திடீரெனக் கைது!



(ஹெப்ரோன்)

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் இஸ்ரேலிப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கைதாகினர்.

நேற்றையதினம் இரவும் பகலுமாக இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாகவும், ஹமாஸ் இயக்கத் தலைவர்களைக் கைது செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனவும், இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

கடந்த சனியன்று இரவு - ஹமாஸின் முக்கிய தலைவர் அப்துல்லா கவாஸ்மே, ஹெப்ரோனில் வைத்து இஸ்ரேலியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டமை பலஸ்தீனர்களிடையே, கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றிருகின்றன.

ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதுபோன்று இன்னொரு சம்பவம் நடக்குமாயின- அது சமாதான நகர்வை நிச்சயம் பாதிக்கும் என, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறினார்.

அமெரிக்காவின் புதிய சமாதான வழிகாட்டுத் திட்டத்தை (**US-backed roadmap peace plan**) முன்னெடுப்பதற்கு, ஹமாஸ் போன்ற கடும் போக்குப் பலஸ்தீனக் குழுக்களை சமாதானப்படுத்தும், பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸின் முயற்சிகளுக்கும் - மேற்படி தாக்குதல் பலத்த அடியைக் கொடுத்திருக்கிறது.

இதேவேளை, ஹமாஸ் உயர் தலைவர் கொல்லப்பட்டதுடன் - தனது தற்காலிகப் போர் நிறுத்தத்தைக் கைவிட ஹமாஸ் தீர்மானித்திருப்பதாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட அப்துல்லா கவாஸ்மே, ஜெருசலேம் உட்பட மூன்று இடங்களில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரி என்றும், இவரைத் தாக்குவது போர்நிறுத்த மீறலாகாது எனவும் இஸ்ரேல் கூறியிருக்கிறது.

உலகவலம்

## இந்திய ரயில் விபத்தில் பலியானோர் 51 ஆக உயர்வு!

இந்தியாவில் கடந்த ஞாயிறன்று இரவு நடந்த ரயில் விபத்தில், பலியானோரின் எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது.

தண்டவாளத்திலிருந்து விலகியதால் விபத்துக்குள்ளான மேற்படி ரயிலின் பெட்டிகளை - பொலிஸாரும், இராணுவத்தினரும் நேற்று அகற்றிப் பார்த்ததில் - பலியானோரின் மேலும் பல சடலங்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டன.

கடும்மழை காரணமாக - நிலம் சரிந்ததால் இந்த விபத்து நடந்ததாக, தற்போது ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்களில் 10 பேர் பெண்களென்றும், ஒன்பது பேர் குழந்தைகள் எனவும்- இந்திய ரயில்வேயின் பேச்சாளர் வைஷாலி பட்னாகே கூறினார்.

## நியாயத்தை வென்றெடுப்பதற்கு பொங்கு தமிழ் உறுதுணையாகும்!

### அமைச்சர் மகேஸ்வரன் செய்தி

பல்கலைக்கழக மாணவ சமூகத்தினர், தமிழ்மக்களின் உரிமைகளை வலியுறுத்தி, மக்கள் போராட்டங்களை சாத்வீகமான வழியில் நடத்துவது- உரிமைகளை வென்றெடுப்பதற்காக அளப்பெரிய தியாகங்களைச் செய்து போராடியவர்களுக்கு - தமது நியாயபூர்வமான கோரிக்கைளை வென்றெடுப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் - இரு கருத்துக்களுக்கு இடமில்லையென, 'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி அமைச்சர் மகேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்து, 1948 ஆம் ஆண்டு இலங்கை விடுதலை பெற்றபொழுது, இங்கு பன்னெடுங்காலமாக இறைமையுடன் வாழ்ந்துவந்த தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள், சிங்கள ஆட்சியாளரினால் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வந்தன.

இவற்றுள் - பொருளாதாரம், கல்வி, கலாசாரம், நிலம் ஆகிய ஜீவாதார உரிமைகள் அனைத்தும் அடங்கும். சாத்வீகமுறையில் போராட்டங்களை நடத்திவந்த தமிழ்மக்கள், அத்தகைய போராட்டங்களில் நம்பிக்கை இழந்தமையினால், தமிழ் இளைஞர் தீவிரவாதப் போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அப்போராட்டத்தின் விளைவாக, ஆட்சியாளர்கள் தமது இன ஒடுக்குமுறைச் செயல்களுக்கு நியாயம் கற்பித்து, உலகை ஏமாற்றிவந்த நிலைக்குக் குந்தகம் ஏற்பட்டது. இதனால், தமிழ்மக்களுடைய உரிமைகளை வழங்கவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

அச்சூழ்நிலையின் ஆரம்ப விளைவே, இன்று நடைமுறையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம். ஆயினும், போர்நிறுத்த சூழலில்கூட, மறுக்கப்பட்ட தமிழ்மக்களின் உரிமைகளை வழங்குவதற்கான உறுதியான செயற்பாடுகளை, இதுவரை காணமுடியவில்லை.

மூன்றாவது ஆண்டாக இத்தகைய 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சி நடைபெறுகின்ற இச்சந்தர்ப்பத்திலே, பாதுகாப்புக் கெடுபிடிகள் நிலவிய ஒரு காலகட்டத்தில், முதலாவது 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பூரண ஒத்துழைப்பு வழங்கிய ஒரேயொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், பெருமைப்படுகின்றேன்.

இன்றைய 'பொங்கு தமிழ்' நிகழச்சியின்போது, மக்கள் அனைவரையும் ஒன்றுபட்டு, ஒரே குரலில் கட்டுப்பாட்டுடன் செயற்படுமாறு வேண்டிக்கொளகின்றேன்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எமது மண் எமக்கே என்பதை உலகுக்கு எடுத்துரைப்போம்!

### ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா அறைகூவல்

நமது சொந்த மண்ணில், நமது சொந்தக் காணிகளுக்குள், காலடி எடுத்து வைக்க முடியாமல் தடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எமது மக்களின் மனக்குமுறல்களை - இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையில் அக்கறை காட்டி நிற்கும் அனைத்து நாடுகளுக்கும் உணர்த்திடும் விதத்தில் - எதிர்வரும் வெள்ளிக்கிழமை 'பொங்கு தமிழ்' பேரெழுச்சி அமைந்திட வேண்டும்.

- இவ்வாறு 'ரெலோ' முதல்வர் என்.ஸ்ரீகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும்,

போரின்போது தமது வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்த நமது மக்கள், போர் நிறுத்தப்பட்டிருக்கும் நிகழ்காலத்தில் - மீண்டும் தமது வீடுகளிற்குத் திரும்ப முடியாது - காணிகளுக்குள் கால் பதிக்கமுடியாது என்றிருக்கும் நிலைமை, விடாப்பிடியான அடாவடித்தனத்தின் உச்சக்கட்டமே என்பது உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

படைமுகாம்களுக்கும், வாடிவீடுகளுக்குமாக - பொதுமக்களின் தனிப்பட்ட சொத்துக்களான காணிகளும், கட்டடங்களும் தொடர்ந்து அபகரிக்கப்படுவதை இனிமேலும் சகித்துக்கொள்ள தமிழினம் தயாராக இல்லையென்பது தெட்டத்தெளிவாகத் தெரிவிக்கப்படவேண்டும்.

எமது தமிழீழத் தாயகத்தின் 'தலை' எனக் கொள்ளப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், தனியார் காணிகளுக்குள் சட்டவிரோதமாக நிலைகொண்டிருக்கும் அரசபடைகள், உடனடியாக வெளியேறவேண்டும் என்ற 'முன்னறிவித்தல்' - பொங்கு தமிழில் எங்கள் தமிழினத்தாலே தரப்படவேண்டும்.

நாளைமறுநாள் வெள்ளிக்கிழமை - யாழ்.பல்கலைக்கழகத்தில் அனைவரும் அணிதிரள்வோம்! 'எமது மண் எமக்கே' என்பதை உலகுக்கு எடுத்துரைப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம் (வ/து)**

**லான்மாஸ்ரர் கம்பிக்கலப்பை விற்பனை**

சங்கம் அண்மையில் கொள்வனவு செய்த குபேட்டா (ஜப்பான்) கே 75 ரக லான்மாஸ்ரருடன் இணைந்து வந்த கம்பிக் கலப்பைத் தொகுதி விற்பனை செய்யப்படவுள்ளது. விரும்புவோர் தமது கூறுவிலைகளை பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் வைத்து பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரியிட்டு 07.07.2003ந்திகதிக்குள் சமர்ப்பிக்கவும். கடித உறையில் "கம்பிக் கலப்பை கேள்வி" எனக் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விக்கூறுகளை ஏற்கும், நிராகரிக்கும் உரிமை சங்கத்திற்கு உண்டு.

நேரில் பார்வையிட விரும்புவோர் சங்கத்தில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.
24.06.2003

(சி-1111)

**துயர் பகிர்வோம்**

யாழ்ப்பாணம் கூ.மொ.வி.தா. ஊழியர் திரு.M.சாந்திநிகேசன்
அவர்களின் பாசமிகு மனைவி

**திருமதி சரோஜினிதேவி சாந்திநிகேசன்**

அவர்களின் அகால மரணமடைந்த செய்திகேட்டு அதிர்ந்து போனோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உறுப்பினர்கள்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கூட்டுறவு மொத்த விற்பனவுத் தாபனம்
யாழ்ப்பாணம்.

(394)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கப்பல் தகர்ப்புக்குப் பின்னணியில் கடற்படை அதிகாரிகள் பதவிப்போட்டி!

## ஜனாதிபதியிடம் நேரடி உத்தரவைப் பெற்றது ஏன்?

சர்வதேசக் கடற்பரப்பில், சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் கப்பலை, கடற்படையினர் தாக்கி அழித்த சம்பவத்தில் இரு கடற்படை உயர் அதிகாரிகளுக்கிடையிலான பதவிப் போட்டியும் இருந்தமை குறித்து, புதிய தகவல்கள் வெளிவந்து கொணடிருக்கின்றன.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரியின் தரத்துக்கு அடுத்த நிலையில், இரு அதிகாரிகள் ஒரே தரத்தில் உள்ளனர். இவர்களில் ஒருவரான மொஹான் விஜயவிக்கிரம, கடறபடையின் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

இவரது பதவிநிலைக்குச் சமனாக, வேறொருவர் கிழக்குப் பிராந்தியக் கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

இந்த இருவருக்கும் இடையிலான பதவிப் போட்டி காரணமாக- கடற்படைத் தலைமை அதிகாரிக்குத் தெரிவிக்காமல் - ஜனாதிபதிக்கு நேரடியாகவே புலிகளின் கப்பல் பற்றி, குறிப்பிட்ட கிழக்குப் பிராந்திய கட்டளை அதிகாரி தெரிவித்தாராம்.

ஜனாதிபதியிடமிருந்து கிடைத்த உத்தரவையடுத்து அக்கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது.

ஜனாதிபதியிடம் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், இதன்மூலம அடுத்த கடற்படைத் தளபதி பதவியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவுமே, இத்தாக்குதலுக்கான உத்தரவு குறிப்பிட்ட கிழக்குப் பிராந்திய கட்டளை அதிகாரி ஜனாதிபதியிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டதாகத் தெரியவருகின்றது.

தற்போதைய கடற்படைத் தளபதி, சேவை நீடிப்பிலேயே உள்ளார் என்பதும் அடுத்த கடற்படைத் தளபதியை ஜனாதிபதியே நியமிப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இடம்டபெயர்ந்தோர் கொடுப்பனவுக்கு 200 மில்லியன் டொலர்

போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான - உதவிக் கொடுப்பனவுக்கென, அரசாங்கம் 200 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளதாக, தெரிவிக்கப்படுகின்றது. இதனை, அமைச்சரவையும் அங்கீகரித்திருப்பதாக, அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இதன்படி ஒரு லட்சம் ரூபா உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதற்கான தரவுசேகரிப்பு நடவடிக்கைகளை புனர்வாழ்வு அமைச்சும், யு.என்.எச்.சி.ஆரும் இணைந்து மேற்கொண்டன. போரினால் 2 லட்சத்து 27ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. 30 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். மூன்று இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் 50 ஆயிரம் பேர் வ்சிப்பதாகவும, அரசாங்கம் அறிவித்துள்ளது.

## நாடும் நடப்பும்




### கண்காணிப்பு...

சமர்ப்பித்துள்ளன. இந்த அறிக்கைகளை, கண்காணிப்புக் குழுவின் தலைமையகம் விரிவாக ஆராய்ந்து, இது தொடர்பாக இறுதி அறிக்கையின் வடிவத்தை நேற்றுத் தயாரித்தது.

கண்காணிப்புக் குழுவின் பிராந்திய அலுவலகங்களின் அறிக்கைகளில், கடற்படையினர் மற்றும் கடற்புலிகளின் வாக்குமூலங்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை - கப்பல் மூழ்கியதாக இருதரப்பும் கூறிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்ட பிரதிநிதிகள் - கப்பல் மூழ்கிய தடயம் எதையும் காணமுடியவில்லை என்று தெரிவித்ததாகவும் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் கூறியுள்ளார்.

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

### பொங்குதமிழ்...

சேவையிலுள்ள அரச, தனியார் பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பவற்றிலும் 'பொங்கு தமிழ்' எழுச்சிக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

மொத்தத்தில் - 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வையொட்டி யாழ். குடாநாடு எழுச்சிக்கோலம் பூண்டு காணப்படுகின்றது.

# யாழ். மனித உரிமை அலுவலகத்திற்கு மேலும் மூன்று அதிகாரிகள் நியமனம்!

## விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை

மனித உரிமைகள் ஆணைக்குழுவின், யாழ்மாவட்ட இணைப்பு அலுவலகத்தின் - செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கு வசதியாக, மிக விரைவில் மூன்று அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின், கொழும்பு அலுவலகத்திற்கு அடுத்தபடியாக யாழ்.மாவட்ட இணைப்பு அலுவலகமே, காணப்படுகின்றது. எனவே, இதன் செயற்பாடுகளை துரிதப்படுத்த வசதியாகவும், தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பான, முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு வசதியாகவுமே மேலதிகமாக, மூன்று அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதன்மூலம் - முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு - மிகவிரைவில் அதற்குரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவும் முடியும் என, தெரிவிக்கப்படுகிறது. (ரா)

# அமெரிக்க நாசகாரிக் கப்பல் கொழும்பை விட்டுப் புறப்பட்டது!

அண்மையில் கொழும்பு துறைமுகத்திற்கு வந்த அமெரிக்க ஏவுகணை நாசகாரிக் கப்பல், நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

350 அமெரிக்கப் படையினருடன் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த - அமெரிக்க ஏவுகணை நாசகாரிக்கப்பலான 'யு.எஸ்.எஸ் ஓ கேன்' என்ற கப்பலே நேற்று முன்தினம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

இதேவேளை - அவுஸ்திரேலிய கடற்படையின் கப்பல் ஒன்று, நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாகத் தெரியவருகிறது.

அண்மையில் அவுஸ்திரேலியக் கடற்படையின் 'எச்.எம்.ஏ.எஸ். 'கனின்னா' என்ற யுத்தக் கப்பலும் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை - கடற்படையின் பீரங்கிக்கப்பலான 'சரயு'வும் தற்போது கொழும்புத் துறைமுகத்திலேயே தரித்து நிற்கிறது.

### கடைகள்...

இந்தநிகழ்வில் சகலரும் கலந்துகொள்வதற்கு வசதியாகவுமே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாளையும், நாளைமறுதினமும் அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், தனியார் கல்வி நிலையங்கள், சினிமாத் திரையரங்குகள் ஆகியவற்றை மூடும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

எனினும் - உணவகங்கள், மருத்துவ நிலையங்கள், மருந்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஆகியவற்றை வழமைபோல் திறக்கும்படியும் மாணவர் ஒன்றியத்தினால் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த இரு தினங்களிலும் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### நயினாதீவு உற்சவத்துக்கு...

கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் - பல்வேறு அமைப்புக்களினதும், திணைக்களங்களினதும் அதிகாரிகளுடன், இராணுவம், பொலிஸ், கடற்படை ஆகியவற்றின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இம்முறை - கடற்படையினரின் பாஸ் நடைமுறை குறிகாட்டுவான் துறைமுகத்தில் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என, கடற்படையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி அங்கு தெரிவித்தார்.

இதேவேளை - உற்சவத்திற்குச் செல்வோரின் நலன்கருதி, போதியளவு படகுகளை இன்றிலிருந்து சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை படகுச் சேவை நடைபெறும். இரவு 7.30 மணிவரையும் படகுகள் சேவையில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 11 ஆம் திகதி, சப்பறத் திருவிழா நாளன்று இரவு 12 மணிவரையும் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் படகுகளை, உரிய அதிகாரிகள் பார்வையிட்டபின் - சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பக்தர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதியளவு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவும் போக்குவரத்துசபை தயாராகவுள்ளது.

அதேவேளை - உற்சவத்துக்கு வருவோருக்கான அன்னதானப் பணியினை 16 நாட்களும் மேற்கொள்ள, அமுதசுரபி அன்னதான சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும்- சுகாதார வசதி, குடிநீர் வசதிகள் ஆகியன செய்யப்பட்டுள்ளதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# புலிகளிடமுள்ள பொலிஸாரை உறவினர்கள் பார்வையிட்டனர்!

விடுதலைப் புலிகளால் மட்டக்களப்பில், தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு பொலிஸாரையும் - அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பார்த்துவிட்டுத் திரும்பியுள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரான, மாத்தளையைச் சேர்ந்த ஏ.சீ.எம்.சேனாதீர, கண்டியைச் சேர்ந்த நிகால் ஆகிய இருவரையும் விடுதலைப் புலிகள் கடந்த 10 ஆம் திகதி முதல் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்களைப் பார்ப்பதற்கே, இவர்களது பெற்றோர் மற்றும் உறவீனர்கள் 9 பேர் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று திரும்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் வாகனமொன்றில் அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள், தங்கள் பிள்ளைகளுடன் 5 மணித்தியாலங்கள் தங்கியிருந்த பின்னர், மீண்டும் விடுதலைப் புலிகளால் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக் கொண்டுவந்து விடப்பட்டனர்.

### புலிகள்...

பிரதமருக்கு விரிவாக விளக்கிக் கூறப்பட்டது.

புலிகள் கேட்டிருப்பது போன்று, ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான வரைபை வழங்கத் தயாராக இருப்பதாகவும்- இதற்கான வரைபு ஒன்றைத் தயாரித்து, புலிகளின் பரிசீலனைக்காக விரைவில் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துவருவதாகவும், பிரதமர் ரணில எரிக் சொல்ஹெய்மிடம் சந்திப்பின் போது தெரிவித்தார்.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

### பாதுகாப்பு வலய...

மீள்குடியேற முடியாத நிலை ஏற்பட்டு, அகதிமுகாம் வாழ்க்கை தொடர்வது பற்றியும் - தென்னாபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இச்சந்திப்பில் - மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.சி.எம்.இக்பால், யாழ்.மாவட்ட இணைப்பாளர் ருவான் சந்திரசேகர, மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், கியூடெக் இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அலுவலர் சோதிநாதன், மனித உரிமை ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோர் செயற்திட்ட அதிகாரி வேழினி ஆகியோர் கலந்து கொண்டனர். (ரா)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.